# மட்டு. தபாலகத்தில் பணம் முத்திரை கொள்ளை; தொலைபேசிக் கருவிகள் லொறியுடன் கடத்தல்!

(மட்டுநகர்)

மட்டுநகர் பிரதான தபாலகத்தில் நேற்று நடைபெற்ற பட்டப்பகல் கொள்ளையொன்று பற்றி புகார் செய்யப்பட்டுள்ளது. காலை சுமார் பத்து மணியளவில் தபாலகத்துக்குள் பயங்கர ஆயுதங்கள், துப்பாக்கிகள் சகிதம் நுழைந்த சுமார் ஐம்பது பேர் கொண்ட கோஷ்டியொன்று, அங்கு கடமையிலிருந்த அனைவரையும் நிலத்தில் குப்புறப்படுக்க வைத்து விட்டே கொள்ளையை நடத்தினராம். இரண்டாயிரத்து ஐநூறு ரூபா பணமும், நாற்பத்தேழாயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகளும் கொள்ளையடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மட்டுநகரில் நடைபெற்ற மற்றொரு சம்பவத்தில் தொலைதொடர்பு திணைக்களத்துக்குச் சொந்தமான லொறியொன்று லட்சக் கணக்கான ரூபா பெறுமதியான தொலைபேசி உபகரணங்களுடன் கடத்தப்பட்டுள்ளது. புல்லுமலை ராணுவ முகாமுக்கு புதிய தொலைபேசி இணைப்பு வழங்குவதற்காக ஊழியர்களுடன் லொறி சென்றபோது. அவர்களை இறக்கிவிட்டே லொறியைக் கடத்திச் சென்றதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது இச்சம்பவம் பற்றி பொலிஸார் விசாரணை நடத்துமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

Registered as a Newspaper in Sri Lanka

ஈழமுரசு

முரசு2 15-12-85 ஞாயிறு (கார்த்திகை 30 ரபியு ஆகிர் 2) முழக்கம் 310

# முல்லை மாவட்ட அகதி முகாம்களை மூடிவிட உத்தரவு

## சகல அகதிகளையும் ஜனவரி இறுதிககுள் சொந்த இடங்களுக்கு அனுப்ப நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு, முள்ளியவளை, வற்றுப்பளை, தண்ணீரூற்று ஆகிய இடங்களிலுள்ள சகல தமிழர் அகதி முகாம்களையும் மூடுமாறு உயர்பீடம் உத்தரவிட்டுள்ளது. ஜனவரி மாதத்துடன் இவைகள் மூடப்படும் எனவும், சகல அகதிகளும் அவரவர் சொந்த இடங்களுக்கே திருப்பி அனுப்பப்படுவரெனவும் முல்லைத்தீவு இராணுவ இணைப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அகதி முகாம்களின் பொறுப்பதிகாரிகள், உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோரை இராணுவ முகாமில் சந்தித்தபோதே இணைப்பதிகாரி இதனைத் தெரிவித்தார்.

தென்னைமரவாடி, கொக்குளாய், கொக்குத் தொடுவாய், போன்ற இடங்களில் கடந்த வருட இறுதிப் பகுதியில் இடம்பெற்ற கலவரங்களால் பாதிக்கப்பட்ட பெருமளவு தமிழ் அகதிகளே இங்குள்ள முகாம்களில் இப்பொழுது தங்கியுள்ளார்கள்.

இம்முகாம்களில்உள்ளவர்கள் வெளியே சென்று தங்கவோ, வெளி ஆட்கள் இம் முகாம்களில் வந்து தங்குவதற்கோ அனுமதிக்க வேண்டாம் என

... 12ம் பக்கம் பார்க்க

## ஆயுதப்படை திடீர் ரோந்து

(ஒட்டுசுட்டான்)

கடந்த சில தினங்களாக முல்லைத்தீவு நகர்ப்புறத்தில்

...12ஆம் பக்கம் பார்க்க

# திருமலையின் 3 கிராமத்தில் நேற்றும் 75 இளைஞர்கள் கைது!

(திருமலை)

சாம்பல்தீவு, செல்வநாயகபுரம், அன்புவழிபுரம் ஆகிய பகுதிகளில் நேற்று சுமார் எழுபத்தைந்து பேர் ஆயுதப் படையினரால்கைதுசெய்துகொண்டு செல்லப்பட்டனர்.

பெரும்பான்மை இனத்தவருக்குச் சொந்தமான டாக்ஸியொன்று இனம் தெரியாதவர்களால் சேதமாக்கப்பட்டதையடுத்தே இப்பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டதாகவும், பலர் கைதானதாகவும் தெரியவந்துள்ளது.

இவர்களில் 32 பேர் இரவு விடுதலையானதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை மூன்றும் கட்

... 12ம் பக்கம் பார்க்க

# யாழ்.பயணிகளின் பணத்தால் ஒரு பொலிஸ் சுட்டுக் கொலை; மூன்று பொலிஸார் கைது!

(மதவாச்சி)

யாழ்ப்பாணப் பிரயாணிகளிடம் பெற்ற "பாதுகாப்புப் பணத்தை" பங்கீடு செய்வதில் நான்கு பொலிஸாருக்கிடையே ஏற்பட்ட பிரச்சினை துப்பாக்கிச் சூட்டில் முடிந்ததாக தெரியவந்துள்ளது.

இதனால் லியனகே என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஸ்தலத்திலேயே மரணமானார். மற்றைய மூன்று பொலிஸாரும் கைது செய்யப்பட்டு ரிமான்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அனுராதபுரத்துடன் நிறுத்தப்பட்ட யாழ்ப்பாண ரயிலில் வந்த யாழ்ப்பாணப்பயணிகளை பஸ்ஸில் அனுராதபுரத்திலிருந்து வவுனியாவரை கொண்டு சென்று விடுவதற்கான கடமை

- 12ம் பக்கம் பார்க்க

## குண்டுவைத்து தகர்ப்பு

சித்தாண்டியிலுள்ள அரசாங்க அரிசி ஆலை அதிகாரிகள்

...12ம் பக்கம் பார்க்க

★ கருணாநிதி அபாய அறிவிப்பு

# கொலைகள் தொடருமானால் முழுத்தமிழருமே ஒழிவர்!

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் படுகொலையைத் தொடர அனுமதித்தால் முழுத் தமிழருமே அழிக்கப்பட்டுவிடுவர் என்று தமிழீழ ஆதரவாளர் அமைப்பின் முக்கியஸ்தரான தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி அபாய அறிவிப்பு விடுத்துள்ளார்.

இவ்விடயத்தில் இந்திய அரசு உலகின் கவனத்தைசர்கவும், சர்வதேசத்தின் உதவியைப் பெறத் தவறியதாலுமே இந்நிலை ஏற்பட்டதாகவும் கலைஞர் குற்றம் சாட்டியுள்ளார்.

அப்பாவி மக்கள் கொல்லப்படுவதாலும், பாதுகாப்புப் படையினரால் தாக்கப்படுவதிலிருந்துதப்ப அவர்கள்நாட்டைவிட்டு ஓடுவதாலும் இலங்கையில் தமிழர் தொகை அருகி வருவதாகவும் கருணாநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

.. 12 ம் பக்கம் பார்க்க

# வாகனத்தில் ஏற்றப்பட்ட இரு மாணவர்கள் எங்கே?

(மட்டுநகர்)

மட்டுநகரில் வீதியில் வாகனத்தில் சென்ற சீருடையினரால் கூட்டிச் செல்லப்பட்ட இரண்டு மாணவர்களைப்பற்றி எந்தத் தகவலையும் பெறமுடியவில்லையென்று மாணவர்களின் பெற்றோர்புகார்செய்துள்ளனர்.

இவர்கள் எந்த முகாமில் வைக்கப்பட்டுள்ளனர் என்று கூட அறிய முடியவில்லையாம்,

நேற்று சீருடையினரால் வழியில் ஏற்றிச் செல்லப்பட்ட கோட்டைமுனை தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வேறு இரு மாணவர்கள் கல்லடி முகாமுக்கு அண்மையில் இறக்கிவிடப்பட்டனராம். ஜி.சி.ஈ. பரீட்சை எழுதும் இம் மாணவர்கள் இச்சம்பவத்தினால் ஒரு மணி நேரம் தாமதமாக பரீட்சைக்குச் செல்ல நேர்ந்தது.

## கோப்பாய் உ. அ. அதிபர்

பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. சபாபதிப்பிள்ளை இம் மாதம் 26ம் திகதி முதல் கோப்பாய் உதவி அரசாங்க அதிபராகப் பதவியேற்பார்.

# சலாம்ஸ் லொறியில் நடந்த கொள்ளைப் பொருட்களை புளொட் மீட்டுக் கொடுத்தது

(யாழ்ப்பாணம்)

முருகண்டிக்கும் கிளிநொச்சிக்குமிடையே இம்மாதம் 7ம் திகதி சலாம்ஸ் லொறி கடத்தப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் பெரும்பாலானவையும் மீட்கப்பட்டுள்ளதாக லொறி உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

இப்பொருட்களை மீட்டுக் கொடுத்தமைக்காக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துக்கு யாழ். கொழும்பு லொறிப் போக்குவரத்து ஒன்றியம் நன்றி தெரிவித்துள்ளது.

நிறுத்தப்பட்டிருந்தகொழும்புக்கான லொறிச்சேவை மீண்டும் ஆரம்பமாகுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# போருக்குப் பிந்திய விருதை ராஜீவ் காந்தி பெற்றார்

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி இன்று "போருக்கு பிந்திய விருதை" புதுடில்லியில் நேற்றிரவு பெற்றுக் கொண்டார்.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற உச்சிமாநாடு ஒன்றில் இந்தியா, மெக்ஸிக்கோ, தன்சானியா, சுவீடன், ஆர்ஜன்டீனா, கிரீஸ் ஆகிய நாடுகள் 'போருக்கு அப்பாற்பட்ட உலகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்' என்ற பிரகடனத்தை கோரியிருந்தனர்.

இதனையடுத்தே இந்த விருது வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. புதுடில்லியில் பிரதமர் காந்தி பெற்றுக்கொள்ளும் அதேவேளை மற்றை ஐந்து நாடுகளின் தலைநகர்களில் அந்நாட்டுத்தலைவர்களுக்கு இந்த

...12 ம் பக்கம் பார்க்க

## நீதியரசர் சிவா அஞ்சலிக் கூட்டம்

நீதியரசர் வீ. சிவாசுப்பிரமணியம் அவர்கள் மறைவுக்

...12 ம் பக்கம் பார்க்க

# A/L 86 Aug.

கலை, வர்த்தக வகுப்புகளுக்கான

## துரித மீட்டல் வகுப்புகள்

- திட்டமிடப்பட்ட முறையில் பயிற்சி
- NOTES தரப்படமாட்டா
- முற்றாக அச்சடிக்கப்பட்ட இலவச பாடக் குறிப்புகள்-
- 5 வருட வினாக்களுக்கு-விடை (Paper Class)

யாழ் நகரின் பிரபல ஆசிரியர்கள்:-

பொருளியல் :- திரு. கிருஷ்ணானந்தன்
கணக்கியல் :- திரு. வன்னியசிங்கம்
வர்த்தகம் :- திரு. தேவா, திரு. ரட்ணம்
அளவையியல் :- திரு. யுகபாலசிங்கம்
தமிழ் :- திரு. நாகேஸ்வரன்
இந்து நாகரிகம் :- திரு. வேதா
மற்றும் பலர்

ஆரம்பம்: 1-1-86 (காலை 10 மணி)


விபரங்களுக்கு: நேரில் / தபாலில்

ASTAN INSTITUTE
66/1, Hospital Road, Jaffna.


# புதிய அதிகாரி

(உடுவில்)

யாழ். அபிவிருத்திச் சபையின் உடுவில் உப அலுவலகத்தின் புதிய அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகஸ்தராக திருமலை அபிவிருத்திச் சபையில் கடமையாற்றிய திரு. இ. கணேஸ்வரன் இடமாற்றம் பெற்று வந்துள்ளார் இதற்கு முன் இங்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகஸ்தராக விருந்த திரு. வ பாலசுப்பிரமணியம் தெல்லிப்பளை அபிவிருத்திச் சபைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.




✻ கைதடி கிழக்கு கந்தசாமி தம்பதியின் மகள் தர்மினி இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ மானிப்பாய் செல்வலிங்கம் - கிரிஜா தம்பதியின் மகள் ஜானகி முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ கொக்குவில் செம்பியன் லேன் செல்வராஜா - சிவயோகம் தம்பதியின் மகள் மலர்வதனி இன்று பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ வல்வெட்டி நல்லையா - நல்லம்மா தம்பதியின் மகள் விஜயலட்சுமி இன்று பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ நல்லூர் கோவில் வீதி பாலகிருஷ்ணபிள்ளை - சரோஜினிதேவி தம்பதியின் மகள் பாலாவதனி பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்

✻ நெடுந்தீவு சிங்கராயர் - லில்லிமேரி தம்பதியின் மகள் இன்று எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.


## வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு

தொழிலொன்றுடன் வெளிநாடு செல்லுங்கள். 30 நாடுகளில் 70க்கு மேற்பட்ட பல்வேறு தொழில்கள் (JOB CATEGORIES). உயர் தொழில் முதல் கூலி வேலை வரை. 17 முதல் 50 வயது வரை ஆண்களும் பெண்களும் இலவச விமானச் சீட்டு, தங்குமிட வசதி கட்டணம் எதுவுமில்லை. விண்ணப்பப் பத்திரம் மற்றும் விபரங்கள் அடங்கிய கைநூல் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முதலில் சுய விலாசமிட்ட ரூபா 4/25 முத்திரை ஒட்டிய நீண்ட தபாலுறை அனுப்புக. நேரில் வரவேண்டாம்.

FOREIGN ASSIGNMENTS,
CHUNNAKAM.



3ம் பிரிவு

நாளை ஆரம்பம்!

86 A/L
DAY CLASS

(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)

விபரங்கட்கு-

NEW MASTER INSTITUTE
BMC LANE, JAFFNA.


## நன்றி நவிலல்

### திரு. கு. சங்கரப்பிள்ளை அவர்கள்

கு. சங்கரப்பிள்ளை (வைத்திலிங்கம்) அவர்களின் மறைவின்போது பல்லாற்றாலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், சாவகச்சேரி வடக்கு சமாதான சபையினர், வியோ, லயன்ஸ் கழகத்தினர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கத்தினர், அதிபர், மாணவர்கள், அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினர், தாமோதரம்பிள்ளை வீதி, விழிப்புக் குழுவினர் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், நேரில் வந்து ஆறுதல் கூறியோர் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பெரிய அரசடி, சாவகச்சேரி.
மனைவி, மக்கள், மருமக்கள் முதலானோர்.

## வெள்ளத்திற்கு தப்பினாலும் ..

(நல்லூர்)

வெள்ளத்துக்குத்தப்பி முளைத்த நெற்பயிரையும் மாடுகள் மேயும் அவல நிலை செம்மணி வீதியிலுள்ள வயல்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளும், விதைக்காத வயலில் புல் மேயக்கட்டும் மாடுகளும் முளைத்துவரும் வயலிலுள்ள நெற்பயிரைக் கடித்துத் தின்னும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

சிவில் நிர்வாகம் சீர்குலைந்திருக்கும் இந்தவேளையில் இது குறித்து யாருக்கு யார் புகார் செய்வதென்று தெரியாது செம்மணி வீதியில் இருபுறங்கும் வயல் விதைத்த விவசாயிகள் பெருங்கவலையடைந்துள்ளனர்.


வாடிக்கையாளர்களுக்கும், பாவனையாளருக்கும் ஓர் நற்செய்தி



மக்களின் நன்மதிப்பைப்பெற்ற ரோயல் தயாரிப்புகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்,

ட்ரேட் சென்ரர்
ஹோம் பிரைன்ஸ் லிமிட்.
155, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.


## வரி விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ் இந்து உயர்கோபியர் குல மேற்கு ஜேர்மனியில் வேலைசெய்த, 1-1-59ல பிறந்த, செவ்வாய் தோஷமற்ற, அழகிய ஆரோக்கியமான இளைஞருக்கு பத்தொன்பது வயதுற்குட்பட்ட, பிறப்புவிதிஎண்கள் 4-5 5 4 ஆகியவை கொண்ட, அழகான மெல்லிய தோற்றமுடைய மணமகள் தேவை. முழு விபரங்களுடனும், அண்மையில் எடுத்த புகைப்படத்துடனும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி-மல்ரி சேவிசஸ், 37(351) மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம்.


### தவறிவிட்டது

642640232V இலக்க அடையாள அட்டையும், D/L 013348 இலக்க வாகன லைசென்சும் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். க. தட்சணாமூர்த்தி, கச்சேரி - நல்லூர் வீதி, கச்சேரி.

### விற்பனைக்கு

யாழ்ப்பாண மெயின் ரோட்டிலிருக்கும் மானிப்பாய் சந்தைக்கு அருகாமையில் 2 பரப்பும் 9 குளியும், சுற்று மதிலும் கொண்ட காணி விற்பனைக்குண்டு. பரப்பு ரூபா ஒருஇலட்சத்து பத்தாயிரம். தொடர்பு: கங்காதரன், "செல்வநாயகம் பெலற்ஸ்", சந்தை வீதி, மானிப்பாய்.

4 அடுப்பும் அவனும் கொண்ட "இன்வென்ரம்" அமெரிக்கன் இலக்ரிக் குக்கரும், ரூ இன் வன் றேடியோவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு தொடர்பு: கணேசரத்தினம், நாச்சிமார் கோவிலடி, கூளாவடி, ஆனைக்கோட்டை.

உங்கள் நத்தார்

பண்டிகையின் ஆனந்தத்தை

மக்களின் பலவருட நன்மதிப்பைப் பெற்ற

ரோயல் தயாரிப்புகள்

அதிகமாக்கிடும்!

ரோயல் கஸ்ராட்




ரோயல் கோப்பி




ரோயல் பேக்கிங் பவுடர்





ரோயல் ஜெலி




ரோயல் இன்டஸ்ரீஸ்

22 1/1. ஆதமலி பில்டிங்,
ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு-13. போன்: 26679

கிளை: ரோயல் இன்டஸ்ரீஸ், பொன்னையா லேன், வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை.




# அகில பாரத விருது பெற்ற யாழ்ப்பாணப் பரம்பரையின்

## தவில் வித்துவான் வலங்கைமான் சண்முகசுந்தரம்

யாழ்ப்பாணத்துத் தவில் வித்துவ பரம்பரை பறறி முன்னர் ஈழமுரசில் குறிப்பிட்டிருந்தேன். இந்த விததுவ பரமபரைக்குமேலும் பெருமை ஒன்று கிடைத்துள்ளது. தவில் வித்துவான் தமிழ் நாட்டு வலங்கைமான் சண்முகசுந்தரத்திற்கு எத்தனையோ விருதுகள் கிடைத்துள்ளன. இப்பொழுது அகில இந்தியப் பெருமையும் கௌரவமும் கிடைத்துள்ளன இவருக்கு. இதில் யாழ்ப்பாணம் சிறப்பாகப் பெருமை கொள்கின்றது. அது எப்படி? யார் இந்த வலங்கைமான் சண்முகசுந்தரம்? இந்த வினுக்களுக்கு விடைகாணபது பொருத்தமான செயல்.

இற்றைக்குக் கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளுககு முன் நடந்த நிகழ்ச்சி ஒன்றைக் கவனிக்கலாம். இப்பொழுது பெரும்புகழுடன் விளங்குகின்ற தவில் மேதை வலங்கைமான் சண்முகசுந்தரம், அப்பொழுது மூளாய் வைத்திலிங்கம் ஆறுமுகம் சண்முகசுந்தரம். யாழ்ப்பாணத்துத் தவில் வித்துவ பரம்பரையைச் சேர்ந்த மூளாய் ஆறுமுகத்தின் மகன். இளம் சண்முகசுந்தரம் தன் சிட்சைக்காகக் குருநாதர் நாய்ச்சியார் இராகவபிள்ளையிடம் தமிழ்நாடு சென்றிருந்தான். கள்ளம் கபடம் தெரியாத பையன். மிகவும் ஆடம்பரமாகத் தான் குருநாதர் முன்பாக ஓடியாடித் திரிவான். இராகவபிள்ளையிடம் வந்த நண்பர் ஒருவர் வினவினுர்:

''யார் பையன்?''

''இவன் யாழ்ப்பாணத்துப் பையன்; சிட்சைக்கு வந்திருக்கின்றுன்'', என்றுர் தவிற் கலைத் தனிப் பேராசான் இராகவபிள்ளை.

இளம் சண்முகசுந்தரத்தின் ஆடம்பரமான போக்கை விரும்பாத நண்பர், ''உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கவோ?'' என்றுர் கிண்டலாக.

''தங்கமான பையன். இந்தப் பையன் வாசிப்பதைக் கேட்டால் அந்தநிலை வந்தாலும் வரும்'' என்றுர் இராகவபிள்ளை. அந்த உரை வீண் போகவில்லை. மூளாய் சண்முகசுந்தரம் இன்று வலங்கைமான் ஆகிவிட்டார். அவரின் புகழ் இன்று இசை உலகில் நிலைத்துவிட்டது. இந்த விபரத்தை நான் மார்கழித் திங்கள் எழுபத்து நான்காம் ஆண்டில் எழுதி வெளியிட்ட ''இசையும் மரபும்'' என்ற

த. சண்முகசுந்தரம்

நூலில் குறிப்பிட்டுள்ளேன். இளைஞன் மூளாய் வை. ஆ. சண்முகசுந்தரம் வித்தையை முடித்துக் கொண்டு தமிழ் நாட்டில் குடியேறி விட்டான். இவன்மூளாய் ஆ.வை. ஆறுமுகத்தின் மகன். மூளாய் ஆறுமுகம் பின்னர் கோண்டாவில் ஆறுமுகம். இன்றையதலைமுறையினர் விளங்கச் சொன்னுல் தாத்தா ஆறுமுகம்தான். அளவெட்டி நா. குமரகுரு, வடலியடைப்பு ஜெராமன் ஆகிய பெரும் விசதுவான்களின் குரு. மகன் சண்முகசுந்தரத்தின் முதற் குரு. அவரின் தந்தையார் ஆறுமுகம்.

வலங்கைமான் சண்முகசுந்தரத்தின் உடன் பிறந்தோர் மறைந்த நாதசுரவித்துவான் பாலகிருஷ்ணன், இராதாகிருஷ்ணன், மிருதங்கவித்துவான் சந்தானகிருஷ்ணன் வித்துவான் முத்துக்கிருஷ்ணன் யாழ்ப்பாணத்து வித்துவ பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இவர். கோண்டாவில் ஆறுமுகத்தின் முன்னேர் தமிழ் நாட்டைச் சேர்ந்த தஞ்சாவூரைச் சேர்ந்தவர். கலைபிறந்த ஊர் தஞ்சாவூர். வலங்கைமான் சண்முகசுந்தரத்தின் தந்தை வழிப்பூட்டனுர் யாழ்ப்பாணத்துத் தவில் மேதை மூளாய் ஆறுமுகம். ஆறுமுகத்தின் மகன் தவில் வித்துவான் வைத்திலிங்கம். வைத்திலிங்கத்தின் மகன் மூளாய் ஆ. வை. ஆறுமுகம். இந்தத் தவில் வித்துவான் வைத்திலிங்கம் இசை உலகிற்கு அளித்த பெரும் வித்துவானகள் மகன் சீதாராமன், கோவிந்தசாமி, செல்லக்கண்ணுப்பிள்ளை.

மூளாய் ஆ. வை. ஆறுமுகத்தின் பெரியப்பாக்கள் வீராசாமி, சின்னையா போன்றவர்களும் இசைக்காகவே வாழ்ந்தவர்கள. இவர்கள் மூளாயில் வாழ்ந்து அங்குள்ள பிள்ளையார் கோயில், முருகமூர்த்தி கோயில் ஆகியவறறில் சேவகஞ் செய்தவர். நல்ல கமக்காரர். வித்தையுடன் வயலும் செய்து வந்தனர். உண்மையான இசைவேளாளர். எனவே வலங்கைமான் சண்முகசுந்தரத்துடன் குலவித்தையும் தானுக வளர்ந்தது. இப்படியாகக் குலவித்தையும், இயல்பான திறமையும், கடினமான உழைப்பும் அவரை இன்று உன்னத நிலைக்குக் கொண்டுவந்தன. இதில் யாழ்ப்பாணம் பெருமைப் படுகின்றது.

திருச்சி வானெலி நிலையம் ஒரு முறை வலங்கைமான் சண்முகசுந்தரத்தின் நேர்முக உரையை ஒலிபரப்பியது. அப்போது, 'கலை என்றுல் உங்கள் கருத்து என்ன?' என்றகேள்வியை உரையாளர் கேட்டார். 'பெரியவர் சொல்வதைச் சிறியவர் கேட்பதுதான் கலை' என்றுர். இதில் பெரிய உண்மை பொலிந்து கிடக்கின்றது. இந்தியக்கலைஎன்றுல் அதுகுருசீடப் பரம்பரையாக வருவது. வலங்கைமான் சண்முகசுந்தரம் தெரிவித்த கருத்தையே இசை மேதைகள் கித்தார் இரவிசங்கர், நாதசுர இசைப் பெருங் கடல் திருவாவடு இராசரத்தினம் போன்றேர் பல முறையும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்து மூளாயில் பிறந்து வளர்ந்த சண்முகசுந்ரம் இன்று வலங்கைமான் வை. ஆ. சண்முகசுந்தரம் ஆகிவிட்டார். யாழ்ப்பாணத்துத் தவில் வித்துவ பரம்பரையை இன்று நினைவு கூரும் போது கண்டிப்பாக ஒருவரை

(11ஆம் பக்கம் பார்க்க)

### இளம் விதவை

'விதவை'
என்று எழுதுகிறேன்
'பொட்டு' வைக்க முடியவில்லை
சமுதாயம் மட்டுமல்ல
தமிழ் மொழியும் கூடத் தான்
உங்களை
ஒதுக்கி வைத்து விட்டது
என்றுர், 'விகடனில்' நிர்மலா நரேந்திரன்
இதனை நாம் தமிழர் மாற்ற
வேண்டும்.
'இளம்' விதவைக்கு தமிழும்
பொட்டு வைக்கிறது.
இரண்டு பொட்டை ஏற்கிறது
நாமும் பொட்டு வைப்போமே!

● ஈழத்து சிவானந்தன்
(ஆனந்த விகடன் 17. 11 85 இதழில் வெளியானது)

★ இன்றைய இலக்கியப் பிரச்சினை

# எளிமையே தெளிவு என்பது தப்பிதமான அபிப்பிராயம்

★ சிதம்பர ரகுநாதன்

தமிழ் நடை என்றுல் எளிமை, தெளிவு, லாவகம், வேகம முதலியவை இருக்க வேண்டுமென்று கூறுகிருர்கள். வாஸதவம், ஆனுல அவர்களுடைய இந்தக் கூற்றை அடிப்படையாகக் கொண்டு: அதை முழுவதும் நன்கு உணர்ந்து கொள்ளாத மறுமலர்ச்சியாளர்களில் சிலர் ''தமிழ் என்றுல், அந்த மொழியால், யாருக்கும் எந்த விஷயத்தையும் புலப்படுத்தி விடலாம்'' என்று கருதி ஏதோ எழுதி வருகிருர்கள்.

தமிழ் நடையில் தெளிவு, எளிமை இருக்க வேண்டும் என்று யாவரும்தான் விரும்புகிருர்கள். ஆனுல் இதற்காகக் கம்பனையும் பாரதியையும் உதாரணம் காட்டுகிருர்கள்,

''கம்பனிடம் தெளிவிருக்கிறது; பாரதியிடம் தெளிவிருக்கிறது. இருவரையும் யாரும் புரிந்து கொள்ளலாம்'' என்கிருர்கள். இதில் தான் கொஞ்சம ஆலோசனை செய்ய வேண்டியிருக்கின்றது,

தெளிவு எளிமை இரண்டும் ஒன்று சேர்ந்துதான் இயங்கும். ஒன்றையொன்று பிரிக்க முடியாது 'எளிமையே தெளிவு' என்று கருதுவது தப்பிதமான அபிப்பிராயம். காரணம் தெளிவும், எளிமையும் வேறு வேறு பண்புகள் ஒரு பாஷையைத் தெளிவின்றி எளிய நடையிலும் எழுதலாம்! அதேபோல எளிமையின்றித் தெளிவாகவும் எழுத முடியும் இதை உணர வேண்டும்.

''எல்லோருக்கும் விளங்க வேண்டும். அதுதானே மொழிக்கு அழகு'' என்கிருர்கள். எல்லோருக்கும் விளங்க வேண்டிய ஒரு விஷயத்தை எழுதி விடுவதென்பது அவரவர்களுடைய அடிப்படைக் கல்வியின் தராதரத்தைப் பொறுத்திருக்கிறது. எல்லோருக்கும் புரியக்கூடிய எளிய பாஷையில் எவருக்கும் விளங்காத அதீத விஷயங்களைப் பற்றி எழுதமுடியும். இதை மறந்துவிட்டுப் பாரதியையும் கம்பனையும் உதாரணம் காட்டுகிருர்கள்.

> எளிமைப்படுத்தலின் அநர்த்தங்களை விளக்கி விமர்சகர் சிதம்பர ரகுநாதன் அவர்கள் 'மொழியும் தெளிவும்'' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்ட சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றது. 194-ம் ஆண்டில் இது வெளியிடப்பட்டது.

பௌதிக விஷயங்களைப் பற்றி எவ்வளவுதான் எளிய நடையில் எழுதிய போதிலும் விஷயத்தில் ''ஸ்படிகத் தெளிவு'' இல்லா விட்டால் எவருக்கும் புரிவது கஷ்டந்தான், மேலும், அதைப் பற்றிய அடிப்படைக்கல்வியின் அஸ்திவாரந்தான் விஷயத்தைத் தெளிவாக்க முடியும் அதே போலத் தான் வேதாந்த சித்தாந்த விவகாரங்களும், தத்துவ விசாரங்களைப் பற்றி நல்ல எளிய தமிழில் எழுதியிருக்கும் வியாக்கியானங்ளும், பாடல்களும் எவ்வளவோ பேருக்குப் புரியாமமலிருக்கலாம்.

ஆங்கிலேயர்களுக்குப் பெருமை தேடித்தந்த மகா கவி மில்டன் ''இழந்த சுவர்க்கம்' என்ற காவியத்தை எழுதி முடித்த போது, இந்த இழந்த சுவர்க்கத்தை ரொம்பவும் எளிய நடையில் இலகுவாய் எழுதியிருக்கிறேன்'' என்று பெருமைப்பட்டுக் கூறினுன், ஆனுல் அதற்கு வியாக்கியானம் கூறும் ஆங்கிலப் பேராசிரியர்கள் இன்றும் திக்குமுக்காடுகிருர்கள், மாணவர்கள் மில்டனைக் கண்டு நடுங்குகிருர்கள். ஆனுல் மில்டன் கூறியது தப்பு என்றுகிவிடுமா? இல்லை. ''இழந்த சுவர்க்கம்'' போன்ற ஒரு நூலை, அதைவிடச் சுலபமான முறையில் எழுதிவிட முடியாது என்பதை மனசில் கொண்டே அப்படிச் சொன்னுன்.

ஆதலால் கம்பனிடமும், பாரதியிடமும் தெளிவிருக்கலாம். ஆனுல், அவர்களை எல்லோரும் புரிந்து கொள்ளலாம் என்பது தப்பு. பாரதியிடமும் கம்பனிடமும் எவ்வளவு தெளிவு இருக்கவேண்டுமோ, அவ்வளவு தெளிவிருக்கிறது. ஆனுல், அவர்களிடமுள்ள எளிமையையும் தெளிவையும் கொண்டு கல்விநிலையில் சிலபடி ஏறியவர்கள் தான் விஷயங்களைப் புரிந்து கொள்ள முடியும், யாவரும் புரிந்து கொள்ள முடியாது.

தெளிவு என்பது எல்லோருக்கும் புரிந்து விடும்படி விஷயத்தை எழுதிவிடுவதென்பதல்ல. அது முற்றிலும் முடியாத காரியம்.

ஒருவிஷயத்தை எளிய பாஷையில் எவ்வளவு சுலபமாக எழுத முடியுமோ அவ்வளவு சுலபமான முறையில் வெளியிடுவது தான் தெளிவு; இதை எளிமையும், தெளிவையும் ஒன்றுகக் கருதும் மறுமலர்ச்சி ''அத்வைத ஞானிகள்'' உணரவேண்டும்.

''கூடிய சீக்கிரத்தில் எல்லா விஷயங்களையும் தமிழில் கொண்டுவந்து விடலாம்'' என்று ராஜாஜி கூறினுராம். இப்போதுள்ள புதுமை வேகத்தில் தமிழில் எல்லாவிஷயத்

(11ஆம் பக்கத் பார்க்க)

**ஞாயிறு கதம்ப அமிர்தம் ★ ஞாயிறு கதம்ப அமிர்தம் ★ ஞாயிறு கதம்ப அமிர்தம் ★**

# பன்றி வளர்க்கும் இடங்களில் மூளைக் காய்ச்சல் அபாயம்!

மூளைக்காய்ச்சல் என்று இப்போது எங்கும் பரவலாகப் பேசப்படுகிறதே! இது என்ன வகையான நோய்? எவ்வாறு பரவுகிறது என்று தெரியுமா?

மூளையைப் பாதிக்கும் இந்த நோய் ஜப்பானிய வைரஸ். இதற்கு "ஜே. ஈ." என்று ஒரு கௌரவமான பெயர் உண்டு. இதனை ஆங்கிலத்தில் ENCEPHALATIS என்கிறார்கள். இது லத்தீன் வார்த்தையாக இருக்க வேண்டும்.

மூளை வீக்கம் என்று இந்த நோயைத் தமிழில் சொல்வார்கள். இந்தக் காய்ச்சலுக்குக் காரணம் ஒருவகை நுளம்பு. "ட்டைடனேகரிஸ்க்யூலக்ஸ்" என்பது இந்த நோயைப் பரப்பும் நுளம்பின் பெயர்.

நுளம்புக் கடியால் மட்டும் தான் இந்த நோய் பரவுகிறது. பன்றிகள், வாத்துகள், வயல்களிலுள்ள வெள்ளைக் கொக்குகள் தான் இந்த நோயின் பிறப்பிடங்கள்.

பறவைகளிடமிருந்து பன்றிகளுக்குப் போய், அதன் ரத்தத்தில் நோய்க் கிருமிகள் வளர்ச்சியடைகின்றன. பன்றிகள் அதிகமாக வசிக்கும் இடங்களிலுள்ள நுளம்புகள் மனிதர்களைக் கடிப்பதால், மூளைக்காய்ச்சல் பரவுகின்றது.

மூன்று வயது முதல் எட்டு வயது வரையான குழந்தைகளையே இந்நோய் மோசமாகத் தாக்குகின்றது. இந்நோய் முதலில் திடீர் காய்ச்சலாக ஏற்படும். பின்னர் காய்ச்சல் வரவர அதிகமாகி, தலைவலி, முதுகுவலி, கழுத்துப் பிடிப்பு ஏற்பட்டு, வலிப்பு வரும். இறுதியில் கை, கால் செயலற்றுப் போகும்.

1981ம் ஆண்டு தென்னிந்தியாவில் மூளைக்காய்ச்சல் பரவியதால் சுமார் ஆயிரத்து நானூறு பேர் மரணமானது குறிப்பிடத்தக்கது.

## கண்டி அரசனின் கடைசிப் பரம்பரை

கோவிந்தசாமி ராஜசிங்கா என்பவர் கண்டியின் கடைசி அரசன். ஸ்ரீ விக்கிமராஜசிங்கனின் பரம்பரையில் வந்தவர். இவர் 1971 மார்ச் 28ம் திகதி சென்னையில் காலமாகிவிட்டார் இறக்கும் போது இவருக்கு வயது 91.

ஆங்கிலேயர்கள் கண்டியைக் கைப்பற்றியபோது ஸ்ரீ விக்ரமராஜசிங்கனையும், அவனுடைய குடும்பத்தினரையும் கைது செய்து வேலூர் கோட்டையில் சிறைவைத்தனர். இது நடந்தது 1816ம் ஆண்டில்.

இக்குடும்பத்தினர் சிறையில் இருக்கும்போது ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனுக்குப் பிறந்த பேரக்குழந்தைதான் கோவிந்தசாமி ராஜசிங்கா, இவர் சென்னையில்தான் வசித்து வந்தார். இவருடைய மகன் போக னந்த ராஜசிங்கா இலங்கையின் மத்திய வங்கியில் பெருத்த உத்தியோகத்திலிருந்து 1964ம் ஆண்டில் காலமானார். கோவிந்தசாமி ராஜசிங்காவின் மனைவியான அன்னதாலியும் அவருடைய பிள்ளைகளான சுந்தர ராஜசிங்கா, சுத்கு ராஜசிங்கா என்போரும் தான் இப்போது இருக்கிறார்கள்.

## கொஞ்சம் கொஞ்சமாக உப்புப் போட்டனர்!

ஒரு தடவை, கூடாரம் ஒன்றில் சிலர் ஒரு விருந்தாளிக்காக உணவு தயாரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அடுப்பில் தீமூட்டி, அதன் மீது ஒரு பானையை வைத்து விட்டு, வேறு அலுவல்களைக் கவனிக்கச் சென்றார்கள்.

வீட்டுக்காரர்கள் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தபோது, விருந்தாளி தனியாக உட்கார்ந்திருந்தான்.

சிறிது நேரம் சென்றதும் வீட்டுத்தலைவி கூடாரத்தினுள் வந்தாள். அடுப்பை அணுகி, பானையில் சிறிது உப்பை அள்ளிப் போட்டாள்.

அவள்போனாள். பிறகு மகள் வந்தாள். அவள் அவசரமாக அடுப்பருகே போய், கொஞ்சம் உப்பு எடுத்து பானையில் போட்டாள்.

பிறகு பாட்டி தள்ளாடியவாறு வந்தாள் அவளும் அடுப்பில் இருந்த உணவுக்கு உப்புப் போட்டாள்.

முடிவில் அவர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள். பாட்டி உணவை வாயில் வைத்ததும், அதில் உப்பு அதிகம் என உணர்ந்தாள் மகள் அதை ருசி பார்த்ததும் ரொம்ப மோசமாக இருக்கிறது என்று கண்டாள். வீட்டுத்தலைவி அதைச் சுவைத்து விட்டு முகத்தைச் சுளித்தாள். குடும்பத்தலைவர் ஒரு கவளம் வாயில் போட்ட உடனேயே அதைத்துப்பி விட்டார்.

உணவில் உப்பு எப்படி அதிகம் ஆயிற்று என்று ஒவ்வொருவரும் அதிசயித்தார்கள்.

'நான் துளியூண்டு உப்புத்தான் போட்டேன்' என்று பாட்டி சொன்னாள்.

'நானும் அவ்வளவுதான் போட்டேன்' என்று மகள் சொன்னாள்.

நீங்கள் இரண்டு பேரும் உப்புப்போட மறந்திருப்பீர்கள் என்று நினைத்து நானும் கொஞ்சம் உப்புப் போட்டேன்' என்று தலைவி ஒப்புக் கொண்டாள்.

'நானும் கொஞ்சம் உப்பு அள்ளிப் போட்டேன் உணவுக்கு ஒவ்வொருவரும் உப்புப் போடவேண்டியது வழக்கம் போலிருக்கிறது என்று நான் நினைத்தேன்' என்று விருந்தாளி சொன்னான்.

இறுதியில் உணவு சாப்பிடுவதற்கு லாயக்கில்லாமல் போயிற்று.

# சினிமா மெட்டில் பக்திப்பாடல்களைப் பாடி பக்தர்களைப் பித்தனாக்குகிறார் பித்துக்குளி

கடந்த ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக, நெஞ்சம் நெகிழ நெகிழ பஜனைப் பாடல்களைப் பாடி, தாம் அத்தகைய ஆனந்த நிலையை அனுபவித்து கேட்பவர்க்கும் அந்த ஆனந்த பரவசநிலையை அளித்து வருபவர் பித்துக்குளி முருகதாஸ். ஜனரஞ்சகமான சில திரைப்படப் பாடல்களின் மெட்டிலும் அவரது பாடல்கள் அமைவதுண்டு.

'மக்களைக் கவர்ந்திழுக்கும் திரைப்பாடல்களின் மெட்டுகளில இறைவனைத் துதிக்கும் பாடல்களைப் பாடும்பொழுது, அதன் மூலமாகவும் மக்களுக்குத் தெய்வ சிந்தனையை ஊட்டிவிட முடிகிறது. மக்களை அவர்கள் வழியிலேயே சென்று பக்தி மார்க்கத்திற்குத் திருப்பிவிடும் ஓர் உத்தியாகத்தான் 'இவன்' சில திரைப்படப் பாடல்களின் மெட்டிலும் பஜனைப் பாடல்களைப் பாடுகிறான். ஆனால் இது முதலடி எடுத்து வைப்பது போலத்தான்.

'இறைவனின் திருநாமத்தை உச்சரிப்பதில் உள்ள சுவையை மக்களுக்கு உணர்த்தி விட்டால் போதும்; பாடல் எந்த மெட்டில் இருக்கிறது என்று கவனிக்கும் எண்ணமெல்லாம் இரண்டாம் பட்சமாகிவிடும். வெறும் நாமாவளிகளைச் சொல்லிக் கொண்டிருப்பதிலேயே அவர்களுக்கு ஆனந்தப் பரவசம் உண்டாகிவிடும்' என்கிறார் முருகதாஸ். தம்மைப்பற்றிக் குறிப்பிடும் போது 'இவன்' என்றே கூறிக் கொள்கிறார்.

இறையுணர்வைப் பெற எளிதான மார்க்கம் பக்திதான். இந்த பக்தியை மிக எளிதில் பெற வழிசெய்வது இனிமையான பஜனை. தமது பஜனைப் பாடல்களால் தெய்வ வழிபாட்டையே ஒரு சுவையான நிகழ்ச்சியாக்கி விடுபவர் பித்துக்குளி முருகதாஸ்.

## ★ அதிதி நிலையும் அகதி நிலையும்

# அன்று- "வா! வா! என்பர்" இன்று- "நாய் ஜாக்கிரதை!"

மேல் நாடுகளில் ORPHAN HOME (அநாதை இல்லம்) என்று தனியாக வைக்கிறார்களென்றால் நம் சாஸ்திரப்படி ஒவ்வொரு இல்லத்திலும் அநாதைக்கும் அதிதிக்கும் இடமுண்டு. மேல்நாட்டுக்காரர்களின் வீட்டுக்குள் அநாதைகளோ அத்திகளோ நுழையக் கூடமுடியாமல் நாய் கட்டியிருக்கும். அவன் வாழ்க்கையோடு, இரத்தத்தோடு அதிதிஸத்காரமும், அநாதைப் பராமரிப்பும் ஒட்டாமல் அவைபாட்டுக்கு 'மெக்கானிக்கலாக' ஸ்தாபன ரீதியில் நடக்கும். எல்லோரும் இப்படி என்று நான் சொல்லவில்லை.

எந்தத் தேசத்திலும் உத்தமர்கள், பரோபகாரிகள், தியாகிகள் உண்டு. அப்படியே சுயநலக்காரர்களும் உண்டு. பொதுவாகச் சொன்னேன். அவனைப் பார்த்துக் கொண்டு "அதிதி தேபோபவ" என்ற கொள்கையைக் கொண்ட நம் தேசத்திலும், வீட்டுவாசல்களில் "நாய் ஜாக்கிரதை' போர்ட் தொங்குவதைப் பார்த்தால் வேதனையாயிருக்கிறது. "வா வா" என்று வழிப்போக்கர்களைக் கூப்பிட்டுப் படுக்க வைத்துக் கொள்ளவே 'திண்ணை' என்பது நம்முடைய வைதீகமான கிருகசில்பத்தில் இருந்தது, இப்போது அதெல்லாம் போச்சு.

மேல் நாட்டு மோஸ்தரில் இங்கேயும் தனிமனிதனின் குடும்பம் தனக்கே என்று ஆனபிறகு, இங்கேயும் அங்கே மாதிரி சமூகப்பணிகளை 'இன்ஸ்ட்டிட்யூஷனலைஸ்' செய்வதாகவும் Welfare State என்பதாக அரசாங்கமே அநாதை யில்லம், வயதானவர் பென்ஷன் என்றெல்லாம் நடத்துவதுமாக ஆகிவிட்டது.

இன்றைய 'ஸெட் அப்பில்' இதுவுமில்லாவிட்டால் நிராதரவானவர்களின் பாடு ரொம்பவும் கஷ்டமானதாகத்தான் ஆகிவிடும். ஆனாலும் பூர்வத்தில் ஒவ்வொருவரும் 'வஸுதைவ குடும்பகம்' (லோகம் முழுக்க ஒருகுடும்பம்) என்ற அன்பான எண்ணத்தோடு தாங்களே ஆதரவற்றவர்களைத் தாங்கித் தரித்த முறையோடு ஒப்பிட்டால் இப்போது ராஜாங்க ரீதியில் அலுவலங்களாக சமூகப்பணிகளை நடத்துவது இரண்டாம் பட்சம் தான்.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.)

## முத்தமிடும்! வற்றிவிடும்!

விழிக் கண்களில் சொட்டுகின்ற
நீர்த் துளிகள் சங்கமித்து கடலில்
சொந்தமுடன் சேர்ந்து ஓயாத அலைகளுடன்
பேரிரைச்சல் போட்டு நொந்த
இதயங்களுக்கு நுரைப் பூக்களை
காணிக்கையாக்கி விட்டு ஓடோடப் போய்
(த)கரை களுக்கும் அஞ்சலி செலுத்தி
பின்னால் வரும் அலைகளுடன்
அரவணைத்துத் தொட்டு முத்தமிடும்
வேசிக் கடல் நாளை வற்றிவிடும்

❁ கடல் வண்ணன்

# நீ எமக்கு உதவவேண்டாம் சும்மா இருந்தால் போதும்!

முப்பத்திரண்டு பற்களும் உணவைப் பதமாக அரைத்துக் கொடுக்க அதனைச் சுவை பார்த்து உள்ளே தள்ளுவது நாக்கின் வேலை.

ஒரு நாக்கு சுவைப்பதற்காக முப்பத்திரண்டு பற்களும் தினசரி வேலை செய்ய வேண்டியுள்ளது ஆனாலும் பற்களால் சுவைபார்க்க முடியாது.

உப்புக் கூடவா? புளி குறையவா? காரம் அதிகமா? உணவைப் பதமாக அரைக்கும் பற்களினால் இதனைக் கண்டு பிடிக்க முடியாது! உள்ளே இருக்கும் நாக்கினால் தான் இது முடியும்.

இவ்வாறு பதமாகத் தமக்கு உணவைத் தயாரித்துத் தரும் பற்களுக்கும் பிரதி உபகாரமாக தன்னால் எதனையும் செய்ய முடியவில்லையே என்பது நாக்கிற்கும் பெரும் வேதனை.

ஒரு நாள் அது தனது மன வேதனையைப் பற்களிடம் தெரிவித்தது. 'தினசரி நேரம் தவறாது எனக்கு உணவுபதமாக்கித் தருகிறீர்களே! உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென விரும்புகின்றேன்' என்று நாக்கு கேட்டது.

பல வருடங்களாகப் பொறுமையாக இருந்த பற்கள் தமது வேதனையை நாக்கிடம் தெரிவித்தன: 'நீ எங்களுக்கு ஒரு உதவியும் செய்ய வேண்டாம். தேவையில்லாத இடங்களில் தேவையற்ற விடயங்களைப் பேசாமல் இருந்தால் போதும். நீ கணக்கக் கதைப்பதால் 'பல்லை உடைப்போம்' என்று கூறி எம்மைத்தானே மனிதர்கள் தாக்குகிறார்கள்! உன்னை எவரும் தாக்குவதில்லையே!'' என்று அவை தெரிவித்தன.

நாக்கு வெட்கத்தால் அடங்கியது.

**ஞாயிறு கதம்ப அமிர்தம் ★ ஞாயிறு கதம்ப அமிர்தம் ★ ஞாயிறு கதம்ப அமிர்தம் ★**

# இன்று மாத்திரம் விடுதலை

★ திக்வயல் தர்மகுலசிங்கம்

காலை பத்து மணிக்குக் கடற்கரையோரத்துக்குப் பக்கத்தில் இருக்கும் அந்தக் கிராமம் பதட்ட நிலையை அடையத் தொடங்கி விட்டது. கிராமத்தின் வான் எல்லையில் மூன்று கெலிக்கப்டர்கள் தாழப்பறந்து சோதனை செய்தன. அந்தக் கிராமத்துக்கு வரப்போகும் பயங்கர சோதனைக்கு இது முன்னறிவிப்பு என்று மக்கள் கருதினார்கள்.

''ஐந்நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் நடைபவனியில் வருகின்றார்களாம்'' செய்தி ஒன்று தூரத்தில் இருந்து வந்து சேர்ந்தது. சிறுவர், சிறுமியர், வாலிபர், குமர்ப்பிள்ளைகள் யாவரும் உயிரைப் பிடித்துக் கொண்டு அங்கும், இங்கும் ஓடினார்கள்.

''எங்கை எல்லாரும் ஓடுகிறது; அவங்கள் நாலுபக்கமும் சுத்தி வளைக்கிறாங்கலாம்'' ஓடிக்கொண்டே ஒருவர் சொன்னார்.

''எல்லோரும் அடையாள அட்டையைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு சரண் அடைவது தான் வழி. ஓடுபவனைக் கண்டால் அவனுக்குச் சந்தேகம்தான் வரும்'' இது இரண்டாம் நபரின் வாக்கு மூலம், கெலிக்கப்டர் மூன்றும் மீண்டும் தாழ்வாகப் பறந்து சென்றது.

டுமீல்... டுமீல்... வானத்தில் இருந்து எச்சரிக்கைக்காகக் கெலிக்கப்டர் ஒன்று நாலாதிசைகளும் சுட்டது.

''யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே ஆமிக்காரன் கிட்ட வந்திட்டான் போலை'' சனங்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

ஆமிக்காரர்கள் நாலாபக்கமும் கிராமத்தைச் சூழ்ந்து கொண்டார்கள். கிராமத்தின் ஒரு தொங்களில் மெசின்கண்ணால சுடும் சத்தம் அதைத் தொடர்ந்து பாரிய ஒரு வெடிச்சத்தம் கேட்டது.

தொடர்ந்து எதிரும் புதிருமாக வெடிகள். தாழப்பறந்த கெலிக்கப்டர் மீண்டும் உயர்ந்து பறந்தது.

'பெரிய வெடிச்சத்தம் கண்ணிவெடிபோலை ஓடு...... ஓடு' சனங்கள் நாலா பக்கமும் கலைந்து ஓடினார்கள்.

● ● ●

வாலிப வயதைக் கடந்து சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க கிழவர் சின்னப்பு ஆமிக்காரர் நுழைந்து விட்ட அந்தக் குமிழடிக் கிராமத்தின் அயற் கிராமமே அவரின் குடியிருப்பு.

நான்கு வேட்டை நாய்கள் அவரின் குடும்ப அங்கத்தவர்கள் போல! துணைக்கு நல்லான் என்பவனின் பக்கபலம்! தானும் நல்லானும் தாக்குப் பிடிக்கக்கூடிய கொட்டன் ஒன்று! இந்த அணி அடுக்குகளுடன் வேட்டைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

தூரத்தே வெடிச்சத்தங்கள் கேட்டாலும் துணிவினை வரவழைத்துக் கொண்டு, பற்றைக் காட்டுப் பக்கமாக அவரும் நல்லானும் நாய்களும் சென்று கொண்டிருந்தன.

அதிகநேரம் ஆகியும் எந்த ஜீவராசிகளும் அவர்களின் கண்களிலே படவில்லை. அவர்கள் பற்றை ஒன்றைத் தற்செயலாக மிரிக்கவே சாம்பல் நிற முயல் ஒன்று வேகமாக ஓடி மறைந்தது. நாலு நாய்களும விட்டுக் கலைத்தாலும் அதிவேகமாக அது ஓடி மறைந்து விட்டது. தனது முயற்சியில் மீண்டும் கலங்காத சின்னப்பு காவோலை ஒன்றின்மேல் மிரித்துச் சென்றார்.

திடீரென அந்த உடும்பு மரணப்பாய்ச்சலில் பாய்ந்து ஓடியது.

'விடாதே பிடி ஜிம்மி...... ஜோன்...கலைத்துப் பிடி' நல்லான் ஆக்கிரோசமாகக் கத்தினான். நாய்கள் ஜெட்வேகத்தில் பறந்தன. நல்லான் கொட்டனுடன் பாய்ந்து பாய்ந்து ஓடினான். உடும்பு பற்றைக்குள் பாய்ந்தது நாலு நாய்களும் மூலைக்கு ஒன்றாகக் காவல் நின்றன. எப்படியும் வெளியே வருவாய் இன்று உனது மரணம் நிச்சயம் என நாய்கள் நான்கும் காவல் காத்து நின்றன. சின்னப்பு பற்றைக்குள் மண்ணை அள்ளிக் கொட்டினார்.

உடும்பு மீண்டும் ஜீவமரணக் களையுடன் பத்தைக்குள் இருந்த பனை மரத்தில் தாவி ஏறிக் கொண்டது.

❋ ❋ ❋

ஆமிக்காரர் சிலர் சிவில் உடையில் நின்று கொண்டிருந்தனர்.

பனங்கூடலால் வந்து கொண்டிருந்த வசந்தகுமாரும் பிறேமனும் வெடிச்சத்தங்களைக் கேட்டபோது தான் ஆமிக்காரர்கள் சுடுவது அறிந்து பனங்கூடலால் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

ஆமிக்காரர் சுட்டகுண்டின் குறி தவறப்படவே அதைத் தொடர்ந்து பல வெடிகள்.

புலி...புலி... கொட்டியா... கொட்டியா நாலாதிசைகளுக்கும் ஆமிக்காரர் பிரிந்து ஓடினார்கள்.

வசந்தகுமாரும், பிறேமனும் ஒரு வீட்டின் மதிலைப்பாய்ந்து அப்பால் ஒரு பாடசாலை வளவுக்கால் ஓடி, தெருவாய்க்கால் பக்கம் சென்று ஆபத்தான கட்டத்தைக் கடந்து ஓடிவிட்டார்கள்.

மக்கள் குமிழடிக் கிராமத்தைக் கடந்து அயற்கிராமத்தில் தஞ்சம் அடைந்தார்கள்.

வீதியில் போன மாடுகள் பல சூடுபட்டு இறந்து கிடந்தன.



இராணுவத்தின் வெடிச் சத்தம் தொடர்ந்து கேட்டது

❋ ❋ ❋

பனை மரத்தின் மீது ஏறி விட்ட உடும்பினை எப்படியாவது பிடிக்கவேண்டும் எனச் சின்னப்பு உறுதி பூண்டார்.

பற்றைக்குள் இருந்த கல் ஒன்றை எடுத்துப் பனை மரத்தில் தட்டினார்.

உடும்பு இறங்கிய பாடாக இல்லை.

இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்பது போல நாய்கள் பனைமரத்தடியில் கூடி நின்றன.

மீண்டும் பலத்தைக் கூட்டிச் சின்னவன் பனைமரத்தில் குத்தினான்.

உடும்பு பனை மரத்தில் இருந்து குதித்தது.

லபக்...ஜிம்மி உடும்பின் தலையில் பிடித்தது. அடுத்த கணம் ஜிம்மியின் வாயில் இருந்து உடும்பை விடுதலை ஆக்கிய நல்லான் அது ஓட முடியாதபடி வாலை வயிற்றுடன் சேர்த்துக் கட்டிக்கொண்டான்.

இன்று வேறு ஒன்றும் அகப்படவில்லை நாய்கள் நான்கும் பத்தையைத் துருவி ஆராய்ந்தபடி வந்து கொண்டிருந்தன. அயல் கிராமத்தின் வெடி ஓசைகள் இப்போது அடங்கியிருந்தது.

அவங்கள் போய்விட்டாங்களாம் என ஒரு சிலர் கதைத்துக் கொண்டார்கள்.

நாய்கள் குமிழடிக் கிராமத்தில் நுழைந்தன இன்று எப்படியாவது இன்னொன்றும் வேண்டும் எப்படியாவது சூ...

நல்லான், சின்னப்பு ஆகியோர் உஷார் ஆகினர்.

பற்றை ஒன்றை மோப்பம் விட்ட நாய்கள் கலவரம் அடைந்து குந்திக்கொண்டன. பத்தையைச் சுத்திச் சுத்தி வந்ததே தவிர நாய்கள் நான்கும் நிலைகொள்ளாது தவித்தன, ஏதோ நல்ல வேட்டை தான்! சின்னப்புவும், நல்லானும் மனத்துக்குள் எண்ணிக் கொண்டார்கள்.

பற்றையை நோட்டம் விட்ட சின்னப்புவுக்கும் நல்லானுக்கும் நெஞ்சு ஒருமுறை உறைந்தது.

வாலிப வயது மதிக்கத்தக்க ஒரு ஆணின் சடலம் துப்பாக்கிவெடி பட்டுப் பற்றைக்குள் கிடந்தது,

காலும், கையும் கட்டப்பட்டு இருந்தது. ஓடிவிடாமல் இருக்க எதிரிகள் எடுத்த முயற்சியாக இருக்கும் இரத்தம் இன்னும் காயவில்லை,

இரண்டு மணிநேரத்துக்கு முன்பு நடந்த களேபரம் தான் இது!

## இலங்கைக் கதையமுதம்

இனம் கண்டுபிடிக்க அதிக நேரம் செல்லவில்லை. பற்றைக்குள் கிடந்த சடலத்தின் பின் கட்டையும், தாம் பிடித்து வந்த உடும்பின் பின் கட்டையும் நல்லானும் சின்னப்புவும் உற்று நோக்கினர். இறந்துவிட்ட உயர்திணையின் சடலம் ஓட முடியாத நிலையில்! உயிருக்காக மன்றாடும் ஒரு அஃறிணை ஓட முடியாத நிலையில்!!

இரண்டையும் அவதானித்த சின்னவன், நல்லான் ஆகிய இருவரும் உடும்பை இன்று விடுதலை செய்வதாகச் சபதம் ஏற்றனர். அதன் கட்டுக்கள் அவிட்டு விடப்பட்டன.

துரத்தாதே .. என நாலு நாய்கட்கும் கண்டிப்பான உத்தரவு போடப்பட்டது.

எஜமானர்களின் புதிய நிலைமையை விளங்கிக்கொள்ள முடியாத நாய்கள் விக்கித்து நின்றன. உடும்பு நிலத்தை விறுண்டியபடி ஓடிய ஒலி ''எங்கே சுதந்திரம்'' என்பது போல ஒலித்தது.

(யாவும் கற்பனை)

# அண்ணனும் தம்பியும்

அண்ணனும் தம்பியுமே அவரவரே போகாமல்
கூடிஒன்றாய் வாழ்ந்து குடியை உயர்த்தவென்று
ஒருவீட்டிலே இருந்து ஒன்றாகவே உழைத்து
ஒருபானை சோறுண்டு ஒற்றுமையாய் வாழ்வதென்றால்
ஒருவருக்குச் 'சோறுகறி' ஒருவருக்கு 'கஞ்சி'யா?
கூடிஒன்றாய் வாழ்ந்ததிலே குறைவாழ்வு பெற்றதம்பி
வீடிருக்கும் காணி முதிச நிலந்தனிலே
தனதாட்சிக் குள்ளபக்கம் தனியாய்வீ டொன்றுகட்டி
உறவு முறைக்கு ஊறொன்றும் நேராமல்
பிரிந்திருக்க எண்ணுவதை 'பிழை' என்று சொல்பவர் யார்?
'உனக்கிந்தக் காணியிலே ஓரிஞ்சி தானுமில்லை,
எங்கேநீ வீடுகட்டும் இலட்சணத்தை பாப்பம்!' என்று
அண்ணன் அதிகார 'அடாவடி'யில் முந்திவிட்டால்!
'குருசேந்திரம்' அன்றிக் குடியுயர்வு கிட்டாது!
'கீதை'க்கு வெற்றி! கொடுமைக்கு சாவுமணி!
இதுதான் நடக்கும், உலக நியதியிது!

அல்லை, க.வ. ஆறுமுகம்

# விடுதலைக்கவிஞர் கரவைக்கிழார் கந்தசாமி

## மதியும் பிறையும்

இலங்கை சுதந்திரம் அடைந்து ஏறக்குறைய நான்கு தசாப்தங்கள் கடந்துவிட்டன. அன்று தொடக்கம் இன்று வரை இலங்கைத் தமிழ்மக்கள், பெரும்பான்மையினரின் பெருந்தேசிய வாதக் கொள்கையால் காலத்திற்குக் காலம் பேரின்னல்களை அனுபவித்து வந்துள்ளனர். இவ்வின்னல்களைப் பொறுக்க முடியாது விடுதலை கோரிப் போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர். எனினும் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் இப்பிரச்சினை எந்த அளவிற்கு இடம் பெற்றுள்ளது என்னும் வினா இன்றும் பரவலாக அடிபடுகின்றது.

இத்தகையதொரு வினாவை 1980 இல் சுடர் சஞ்சிகையில் 'இலக்கிய பிரச்சினை' என்னும் கட்டுரைத் தொடர் எழுதிய பிரம்மா கேட்டுவைத்தார். 'உண்மையான தமிழர் பிரச்சினையைத் துணிவுடன் எழுதவும் விமர்சிக்கவும் முன்வருக என்று தமிழர் சமுதாயம் இன்றைய ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களுக்கு அழைப்பு விடுகின்றது' என அவர் குறிப்பிட்டார். இந்த வேண்டுகோளை எத்தனை எழுத்தாளர்கள் கவனத்தில் கொண்டார்கள் என்பது இன்னொரு வினா.

இப்பிரச்சினை நவீனதமிழ் இலக்கியத்தில் முற்றாக இடம் பெறவில்லையென்று கூற முடியாது. ஈழத்துக் கவிஞர் பலர் இப்பிரச்சனையைத் தமது கவிதைப் பொருளாக்கியுள்ளனர். நீலாவணன், காசி ஆனந்தன், இராதுபாரதி, தான்தோன்றிக் கவிராஜா, முருகையன், மஹாகவி ஆகிய கவிஞர்கள் ஐம்பத்தாறும் ஐம்பத்தேழாம் ஆண்டுகளில் இனவிடுதலைப் பாடல்களைப் பாடினர். புனைகதைத் துறையில் இப்பிரச்சினை மிக அரிதாகவே கையாளப்பட்டது எனலாம்.

1969 இல் தொ. சிங்கராஜூ எழுதிய தாயகம் என்ற குறுநாவல், தெளிவத்தை ஜோசேப்பின் காலங்கள் சாவதில்லை (1974) நாவல், அருளர் எழுதிய லங்காராணி (1978), தி. ஞானசேகரனின் குருதிமலை (1979) என்பவை இனப்பிரச்சினையின் பல்வேறு அம்சங்களைத் தொட்டுக் காட்டுகின்றன. நேரடியாகப் பேரினவாதத்தை எதிர்க்காவிட்டாலும் நாட்டுப்பற்று மொழிப்பற்று என்பவற்றைத் தூண்டி விடக் கூடிய நாடகங்கள் அறுபதுக்குப்பின் எழுந்தன. அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய சங்கிலியன், பண்டாரவன்னியன், கைலைவன்னியன் ஆகியோரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகங்கள் தமிழுணர்ச்சியை வெளிப்படுத்தின.

நாடகத்தின் மூலமும், கவிதைகளின் மூலமும் இனவிடுதலை வேட்கையைத் தூண்டியவர் கரவெட்டியைச் சேர்ந்த கரவைக்கிழார் என்னும் புனைபெயரைத் தாங்கிய திரு. க. கந்தசாமி அவர்கள். 23-5 1931 இல் பிறந்த இவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கல்வி கற்றார். எழுதுவினைஞராகச் சில ஆண்டுகள் பணிபுரிந்த பின் தமது 39 ஆவது வயதிலேயே ஓய்வு பெற்றார் தமிழ் எழுதுவினைஞர் சங்கம் நடத்திய பல போராட்டங்களில் முன்னணி வகித்த தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்த இவர் 1960 இல் கட்டாய ஒய்வுக்கு உள்ளாக்கப்பட்டார்.

இவரது உள்ளம் என்றும் தமிழ் தமிழெனத் தமிழிலேயே ஊறித் திளைப்பதாயிற்று. புலவர் பெருந்தகை தெல்புலோலியூர் கந்தமுருகேசனாரிடம் இலக்கண இலக்கியங்களை வரன் முறையாகக் கற்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இவரது குருநாதரே இவருக்கு 'கரவைக்கிழார்' என்ற புனைபெயரைச் சூட்டியவர். 'தமிழ்ப்பணி என்பது தமிழைக் கொண்டு தான் வாழ்வதல்ல; தமிழை மெச்சுவது மட்டுமல்ல; தமிழ் வாழத் தமிழினம் வாழ தன்னாலானதைச் செய்வதே தமிழ்ப்பணி என்ற எண்ணம் இவர் உள்ளத்தில் இடம் பெறலாயிற்று. கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டவர் மீண்டும் கட்டாய உத்தரவில் அரசாங்க சேவைக்கு அழைக்கப்பட்டார் எனினும் நீண்டகாலம் பணிசெய்யாது ஒய்வு பெற்றார்.

அறுபதுகளில் எழுதத் தொடங்கிய இவரது கவிதைகள் சுதந்திரன், வீரகேசரி, தினகரன், ஈழநாடு ஆகியவற்றிலும் வேறு சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. சிதைந்த சிலை, உயர்ந்த உள்ளம், மறுமலர்ச்சி, ஆதவனே மன்னிப்பாய், தீந்தமிழ்த்தீ, விமோசனம் ஏது? தணியாத தாகம் ஆகியவை இவரது நாடகங்கள். இவற்றில் தணியாத தாகம் என்னும் வரலாற்றுக் கற்பனை நாடகத்தின் முதற்பதிப்பு 1968 இலும் இரண்டாம் பதிப்பு 1970 இலும் வெளியாகின 'கரவைக் கிழார் கவிதைகள்' 1971இல் வெளியாகியது. இந் நூலை தமது குருநாதர் கந்தமுருகேசன் அவர்களுக்கே சமர்ப்பணஞ் செய்துள்ளார். 1960 இல் அவரைச் சந்தித்தபோது அவர் வழங்கிய ஆசியுரையையும் கவிதைத் தொகுதியில் சேர்த்துள்ளார்:

சிந்தனையூற்று மடைதிறந்
தோட
நந்தமிழ் உலவும் நாவுடன்
திகழ்ந்து
பகுத்தறிவுலகம் பலபடப்
புகழத்
திகழ் மகாரின்று செயக நற்
றொவலே

'காரிகை கற்றுக கவிபாடுவதிலும் பேரலகை கொட்டிப் பிழைப்பது நன்றே' என்பது

### மூலமணி

முதுமொழி யாப்பருங்கலக் காரிகை என்னும் நூலே காரிகை என அழைக்கப்படுகின்றது. இந்நூல் செய்யுளின் அமைப்பினையும் வகைகளையும் உறுப்புக்களையும் விபரித்துக் கூறுகின்றது. யாப்பிலக்கண அறிவுடையவர்கள் செய்யுள் இயற்றலாம். ஆனால் அது கவிதையாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. கவிபுனையும் ஆற்றலுள்ளவர்களுக்குக் காரிகை அறிவு பெரும் பயன் தரும். இன்று எமது தமிழ்க் கவிஞர்கள் எத்தனை பேருக்கு யாப்பிலக்கண அறிவு இருக்கிறது என்பதுகேள்வி? கரவைக் கிழார் காரிகை கற்றுக் கவி பாடியவர். ஆனல் அவரது கவிதைகள் இதயத்திலிருந்தே வெளிவந்துள்ளன; மூளையிலிருந்தல்ல. யாப்பு சிந்தனை வெளிப்பாட்டுக்குத் தடையாக இருக்கிறது என்று கூறுபவர்கள் கரவைக் கிழார் கவிதைகளைப் படித்துப் பார்க்க வேண்டும்.

கரவைக்கிழார் கவிதைகளில் உணர்ச்சித்துடிப்பு, உள்ளத்து வீறு, கற்பனைச்செறிவு, சூழ்நிலையின் உந்தல் என்பன தெளிவாக வெளிப்பட்டிருக்கின்றன. அரசியல் மோதல்கள், புரட்டல்கள், அநீதிகள், இனப்புறக்கணிப்புக்கள் வகுப்பு வேற்றுமைகள் மக்கள் வாழ்வின் பல்வேறு துறைகளிலுமுள்ள குறைகள், கொடுமைகள், பழிபாவங்கள், ஊழல்கள், ஊனங்கள், சூழ்ச்சிகள், சுரண்டல்கள் ஆகியவை கரவைக்கிழாரை ஆட்டி அசைத்துள்ளன. அவர் உள்ளத்தில் உண்மையொளி கவிதையூற்றாக வீறுடன் வெளிப் போந்தது. மஹாகவி பாரதியின் வீறு இவரது கவிதைகளில் பரக்கக் காணலாம்.

ஆர்த்தெழுவீர் அடிமை விலங்
கொடித்திடவே
அணியணியாய்த் திரள்வீ
ரென்று
போர்க் கொடியை உயர்த்தி
விட்டார் உறுதிமிகு
தளபதியாம் நமது செல்வர்
கூர்த்தமதி படைத்தோரே
கொள்கைக்கோ
அறப்படையில் சேர்வோம்
வாரீர்
பார்த்தவர்கள் உளம் நடுங்கி
கால்பிடரி
தனிற்பட்டே ஓட ஓட
பாழ் போகும் பகைவர்தம்
எண்ணம்யாவும்
பைந்தமிழர் அறப்போரே
வாகை சூடும்
'ஆழ்வேன் நான்' எனக்கூறும்
ஆணவமே
ஆள்வாய் நீ சுடுகாட்டை
தமிழை அல்ல
தனிமொழிச்சட்டம் இயற்
றப்பட்ட போது
'விடுதலை வீரனே கேளாய்'
என்னும் பாடல் பிறந்தது
தனிமொழிச் சட்டம்
புகுந்திட்ட ஈழம்
தமிழர்க்குப் பாம்புகாண்
மனையே
பனிமொழி பொழியும் பகை
வர்கள் பேச்சு
பாம்பினை விரட்டிட உதவா
இனி நமக் கிங்கே உரிமைகள்
வேண்டின்
எதையுமே இழக்கவே
துணிவோம்
தனி இனம் நாங்கள் தாசர்
கள் ஆகோம்
தரணியில் தமிழராய் வாழ்
வோம்

எழுத்தாள நண்பர்களை நோக்கி வேண்டுகோள் விடுக்கிறார் கரவைக்கிழார்:

''ஈழத்தின் எழுத்தாள நண்
பனே நின்
எழுத்துக்குத் தமிழ் மொழி
தான் மூச்சே என்றார்
கூழுக்குக் கொள்கையினை
ஏலம் போடும்
கும்பலிலே நின்குரலேன்
ஒலிக்க வேண்டும்.''
''உள்ளத்தின் உணர்வதனை
வடித்துக் காட்டு
உணராதார் தமக்கதனைப்
படித்துக் காட்டு''
''சிந்தையணு ஒவ்வொன்றும்
செந்தமிழைக் காக்க
சிந்தட்டும் ரத்தத்தைச்
சிலிர்க்கட்டும் மேனி''
''இல்லந்தான் எரியும் போது
இதயத்தில் காதல் ஏது?''
''பரவட்டும் உரிமைத்தீ பைந்
தமிழர் நெஞ்சில்
பஸ்பமாய்ப் போகட்டும்
பயங் கொள்ளித் தன்மை''

இவரது கவிதைகளில் ஓசை கையாளும் பொருளுக்குக் குற்றேவல் புரிகின்றது.

மானைப்பார்த்து மதியைப்
பார்த்து
வையம் களிக்கப் பாடும் புலவ
கூனைப் பார்த்துக் குருடைப்
பார்த்து
கொள்கை யிழந்தோர் விழிக்
கப் பாடு
தேனைச் சொரியும் மலரைப்
பார்த்துத்
திகட்டாத் தமிழில் பாடும்
புலவ
மானைப் பழித்த மாதர் இன்று
மானம் இழந்த நிலையைப்பாடு

சிறுமைகண்டு சீறும் பாவலராகத்திகழும் கரவைக் கிழாரின் உயிர்மூச்சு இவரது சுதந்திர வேட்கைப் பாடல்களே. எனினும் வேறுவிடயங்கள் பற்றியும் இவர் பாடியுள்ளார். தமிழ்ச் சான்றோர்பற்றி இவர் பாடிய பாடல்கள் தனிச்சுவை வாய்ந்தவை; பாவேந்தர் பாரதிதாசன் மீதும் அறிஞர் அண்ணாமீதும் இவர்பாடிய பாடல்கள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவை.

வன்னிநாட்டில் பனங்காமத்தை ஆண்ட கைலைவன்னியன் தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் டச்சுக்கவர்ணரின் ஆணையை மீறி வரிசெலுத்த மறுத்து நாட்டின் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாத்திருக்கிறான். இந்த வரலாற்றுண்மையை அடிநாதமாகக் கொண்டது இவரது 'தணியாத தாகம்' என்னும் நாடகம்.

இலங்கையின் தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவராசத் திகழும் இவர் சிறந்த பேச்சாளர். இவரது தித்திக்கும் தீந்தமிழ்ப் பேச்சு உணர்ச்சிமயமானது. உள்ளத்தால் உணர்ந்து பேசுவார். இவரது சுதந்திர ஆவேசத்தை கவிதைகளிலும், நாடகங்களிலுல் மாத்திரமன்றி மேடைப் பேச்சிலும் காணலாம். சிலகாலமாக இவரது பேச்சையே காணோம்.

தமிழ்மீது ஆராக்காதல் கொண்ட இவர் தமிழினத்தின் தனிச் சொத்து. இவரது ஆக்கங்களை இளந்தலைமுறையினர் நிச்சயம் படிக்க வேண்டும்.

---

## ஈழமுரசு அனுசரணையுடன்
## யாழ். இலக்கிய வட்டம் நடாத்தும்
## இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி-1985

முதலாம் பரிசு- 500/
இரண்டாம் பரிசு 300/
மூன்றும் பரிசு- 200/

- ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஆர்வம் கொண்டுள்ள படைப்பாளிகள் அனைவரும் பங்கு பற்றலாம்
- ஒருவரே எத்தனை குறுநாவல்களையும் விருப்பப்படி அனுப்பலாம்.
- குறுநாவல் இலக்கிய வகைக்கு ஏற்றம் அளிக்கும் வண்ணம் அளவு, உருவம், உள்ளடக்கம் அமைதல் நன்று.
- ஈழ மண்ணின் மணம் வீசுவதாக வரலாற்று, சமூகப்பின்னணியில் நாவல்கள் இருத்தல் விரும்பத்தக்கது.
- தழுவல், மொழிபெயர்ப்பு, முன்பு ஏற்கனவே எந்த வடிவத்திலாயினும் பிரசுரிக்கப் பட்டவை போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- போட்டியாளர் தனது பெயர், முகவரி போன்றவற்றை நாவலின் எந்த இடத்திலாயினும் பொறிக்காது, தனித் தாளில குறிப்பிட்டு நாவலுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
- ஆக்கம் தமது சொந்தப் படைப்பு என படைப்பாளி உறுதி செய்தல் வேண்டும்.
- நாவலகள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்படல் வேண்டும்.
- நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.
- முடிவு திகதி: 15. 02. 1986 .
- குறு நாவலகள் தபால் மூலம் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். என்வலப்பின் இடது பக்க மேல் மூலையில் ''இரசிகமணி குறுநாவல் போட்டி'' எனத் தவறாது குறிப்பிடப்பட வேண்டும்.
- குறு நாவல்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:-

ஆசிரியர்,
ஈழமுரசு,
37, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

## யுத்தம் தோன்றிவிட்டால் தர்மம் ஏது? நியாயம் ஏது? பெரியோர் ஏது? சிறியோர் ஏது? எல்லோருமே தர்மங்களை, சட்டங்களை, நியாயங்களை மீறத்தொடங்கி விடுகிருர்கள்...




அகளங்கன்

வில்லாளி வில்லாளியோடும் கதாயுதம் வைத்திருப்போன் கதாயுதம் வைத்திருப்போனுடும், தேரில் வருவோன் தேரில் வருவோனேடும், குதிரை வீரன் குதிரைவீரனேடும், காலாள் காலாளோடும், யானையில் வருவோன் யானையில் வருவோனுடனும் யுத்தம் செய்ய வேண்டும். தன்னேடு போர்செய்யாதவனேடு போர் செய்வது யுத்ததர்மமல்ல. போர்க்களத்தில் இருந்து விலகிச் செல்பவனேடு, அல்லது மூர்ச்சை அடைந்து கிடப்பவனேடு, புறங்காட்டி ஓடுபவனேடு, ஆயுதமில்லாதவனேடு, சரண் அடைந்தவனேடு, போர்புரிவது யுத்த முறையல்ல. தன்னேடு போர் புரிவதை சற்று நிறுத்தும்படி கூறுபவனேடு கூட போர் புரியக் கூடாது. இப்படிப் பலவகையான யுத்த முறைகள் அக்கால வழக்கத்தில் இருந்தன. யுத்தம் ஆரம்பித்தபின் இந்த ஒத்த தர்மங்கள் எல்லாம் ஒவ்வொன்ருகக் குழி தோண்டிப் புதைக்கப்பட்டன.

யுத்தவகளினுல் தர்மங்களைக் காப்பாற்றவே முடியாது. யுத்தத்தின் போது யுத்த தர்மங்கள் கூட நிலை குலைந்து விடும் போது, ஏனைய தர்மங்கள் எப்படித்தான் காப்பாற்றப்பட முடியும்?

முதலாம் நாட் போரிலேயே யுத்தமுறை மீறல், அதாவது யுத்த தர்ம மீறல் இடம் பெற்றுவிட்டது இந்தக் கைங்கரியத்தை ஆரம்பித்து வைத்தவர், மகாவீரனும், பெரும் சத்தியவானும் குலப்பிதாமகரும், யுத்தத்தில் கலந்து கொண்டவர்களில் அதிக வயதாளியுமான பீஷ்மர் என்ருல் ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

விராட அரசனின் இளைய மகன் கொல்லப்பட, மூத்த மகனுன சுவேதன் மிகுந்த கோபங்கொண்டு பீஷ்மரை எதிர்த்தான். பீஷ்மருக்கும் சுவேதனுக்கும் நெடுநேரம் விற்போர் நடந்தது. வயதில் இளமை, உடலில் திண்மை, போர்ப்பயிற்சித் திறமை போன்ற வற்ருல் சிறப்புப் பெற்றிருந்த சுவேதனேடு, கிழவனுன பீஷ்மரால் நிலை நிற்க முடியவில்லை. அதனுல் அவர் மனம் வஞ்சனையால் வெல்ல முனைந்தது. சுவேதன் கையிலே வில் வைத்திருக்கும் வரை அவனை வெல்ல முடியாது என்று உணர்ந்து கொண்ட பீஷ்மர், சுவேதனை நோக்கி, 'இந்த விற்போரை விட்டால், வேறு வாள்; தண்டு ஏந்திச் செய்யும போர் ஒன்றும் நீ அறியவில்லையோ' என்று கேட்டார்.

யுத்தத்தில் எதிரி எந்த ஆயுதம் ஏந்திப் போர்புரிய விரும்புகிருனே, அந்த ஆயுதம் ஏந்திப் போர்புரிதல் தான் உண்மை வீரம். அதுதான் யுத்த தர்மம். வெற்றியென்பது தனக்கு ஒப்பானவனிடம் பெறுவதே எதிரிக்கு போதிய சந்தர்ப்பம் கொடுத்து வெல்வதே வெற்றி.

அதனுல் சுவேதனும் "இதோ வாள் எடுத்துப் போர் புரியவும் என்னுல் முடியும்" என்று கூறி கையிலே வாள் ஏந்தி, தேரிலிருந்து கீழே குதித்தான், பீஷ்மரோதானும் அவனேடு வாளேந்திப் போர் புரிய வேண்டிய யுத்த முறையை மீறி சுவேதனுக்கு அம்பெய்து, அவனைக் கொன்று பழியேந்தி நின்ருர். என்று வில்லிபுத்தூரார் குறிப்பிடுகிருர். வாளோடு போர்புரிய வருபவனேடு வாளோடு போர்புரியாமல் அம்பெய்து கொன்று யுத்த முறை மீறலை ஆரம்பித்து வைத்தார் பிதாமகர்,

### மறைந்திருந்து தாக்கல்

பாரத யுத்தத்தில் பதின் மூன்ரும் நாட்போர் மிகவும் முக்கியமான ஒரு போர். அருச்சுனனுக்கும், கிருஷ்ணனின் தங்கையான சுபத்திரைக்கும் மகனுகப் பிறந்த அபிமன்யுவே அன்றைய யுத்தத்தின் கதாநாயகன் என்று குறிப்பிடப்படக் கூடியவன். சுபத்திரையின் வயிற்றில் நிறைமாதக் குழந்தையாக அபிமன்யு இருந்தபொழுது, அருச்சுனன் சுபத்திரைக்கு போர் முறைகள் பற்றி ஒருநாள் கூறிக் கொண்டிருந்தான். சக்கர வியூகத்தை எப்படி உடைத்து உள்ளே சென்று போர்புரிவது என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது, அந்த இடத்துக்கு வந்த கிருஷ்ணன் உரையாடலைக் குழப்பி விட்டான். வயிற்றில் இருந்த அபிமன்யு இந்தக் கதையைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் அதனுல் அவனுக்கு சக்கரத்தை பிளக்க வழிதெரியுமேயன்றி, ஆபத்து ஏற்பட்டால் வெளியேற வழிதெரியாது என்று பாரதக் கதை கூறுகிறது,

வயிற்றில் பிள்ளை இருக்கும் போது தாய்மார்கள் நல்ல விடயங்களை வாசிக்க வேண்டும், நல்ல விடயங்களை யோசிக்க வேண்டும், நல்லவைகளையே கேட்க வேண்டும் என்ற கருத்து இன்றும் நடைமுறையில் உண்டு,

பதின் மூன்ரும் நாட் போருக்கு கௌரவ சேனையை சக்கர வியூகமாக அமைத்திருந்தார் துரோணுச்சாரியார். அன்று அருச்சுனனை திரிகர்த்த ராஜாக்கள் வலிந்து போருக்கழைத்து வேறிடத்துக்குக் கூட்டிச் சென்றனர், அறைகூவலை ஏற்கவேண்டியது சஸ்திரியனின் கடமை. அதனுல் அருச்சுனன் கட்டாயமாக போகவேண்டி இருந்தது. இதுவும் துரோணுச்சாரியாரின் திட்டமே.

பாண்டவர் படையிலே சக்கர வியூகத்தை உடைத்து உள்ளே சென்று போர்புரியக் கூடிய திறமைசாலிகள் இருவர் மட்டும. ஒருவன் அருச்சுனன், மற்றவன் அவனது மகனுன அபிமன்யு. அபிமன்யுவுக்கு சக்கரத்தைப் பிளந்து உள்ளே செல்ல முடியுமே தவிர, வெளியே வரத் தெரியாது. அன்றைய போரில் அருச்சுனன், வேறு இடத்துக்குச் சென்று விட்டதால் சக்கர வியூகத்தை உடைக்கும்படி தருமன், வீமன், முதலியோர் அபிமன்யுவையே வேண்டிக் கொண்டனர். ஆபத்து நேரிட்டால் தன்னுல் வெளியே வரமுடியாது என்று அவன் கூற. "சக்கரம் பிளக்கப் பட்டதும் நாம் எல்லோரும் உன்னுடன் உள்ளே புகுந்து விடுவோம். அதனுல் யோசிக்க வேண்டாம்" என்று வற்புறுத்தினர்.

சக்கரத்தைப் பிளந்து துணிச்சலாக உட்சென்ருன் அபிமன்யு அபிமன்யு உள்ளே சென்றதும் சக்கரம் மீண்டும் மூடப்பட்டுவிட்டது. துரோ

4

(தொடர் கட்டுரை)

ணர், கர்ணன், சல்லியன், அசுவத்தாமா போன்றபெரும் வீரர்களோடெல்லாம், அஞ்சாநெஞ்சுடனும், ஆண்மையுடனும் நின்று போர்புரிந்தான் அபிமன்யு. கந்தபுராணத்துப் பானு கோபன் போல, இராமாயணத்து இந்திரஜித்துப் போல, பாரதத்திலே அபிமன்யு பிரகாசித்தான். போர்புரியும் வேகத்திலும் வீரத்திலும் தந்தை அருச்சுனனைப் போலவும், தாய்மாமன் கிருஷ்ணனைப் போலவும் அபிமன்யு விளங்குவதைக் கண்டு எல்லோரும ஆச்சரியம் அடைந்தனர்.

அருச்சுனனைக் கொல்வேன் என்று வீரம் பேசும் கர்ணனுல் கூட அவனுடன் எதிர்த்து நிற்க முடியவில்லை. அருச்சுனனுக்குக் குருவான துரோணரால் கூட அருச்சுனனின் மகனேடு சமனுகப் போர்புரிய முடியவில்லை. தனித்தனியாகப் போர்புரிந்து தோற்ருேடினுர்கள். துரியோதனனின் மகனுன இலக்கண குமாரன் அபிமன்யுவால் கொல்லப்பட்டதும், துரியோதனன் கோபங் கொண்டு துரோணரை ஏசினுன். எப்படியாவது அபிமன்யுவைக் கொன்றேயாக வேண்டும் என்று ஆணையிட்டான்.

தனித்தனியே தோற்ருேடியவர்கள் அபிமன்யுவைக் கொல்வதற்காக சேர்ந்து எதிர்த்தனர். அபிமன்யுவிற்குப் பின்புறமாக நின்று அவனது கவசத்தையும், வில்லையும், அம்டெய்து, அறுக்கும்படி சேனுதிபதியான துரோணர் கர்ணனை ஏவினுர். அதன்படி அவனும் அபிமன்யுவின் பின்புறம் நின்று கவசத்தையும், வில்லையும், தேரையும் அழித்தான் என்று வியாசர் கூறுகிருர்.

ஒருவனேடு ஒருவன் நேர் நின்று போர் புரிவதுதான் யுத்தமுறை. இன்னெருவனேடு யுத்தஞ் செய்து கொண்டிருப்பவன் மேல் ஒழித்திருந்து அம்

11ம் பக்கம் பார்க்க




### கல்கி கண்ட கோமாளி

நாடக மேடையில் கோமாளிகளுக்கு அந்தக் காலத்தில் தனிமதிப்பு. கல்கி கண்ட பேர்வழி மகா விண்ணன் போலும். பச்சை சிருங்காரப் பேச்சு அவனது ஆயுதம். மேடையிலே வந்து நிற்பார். இரண்டு தடவை கண்களைச் சிமிட்டுவார். சபையிற் சிரிப்பலை மோதத் தொடங்கும். 'மாடிமேல் மாடி' என்பாராம். சபை 'கலீர்' எனச் சிரிக்குமாம். 'மாடி மேல் மாடி' அதன் மேல ஒரு லேடி' என்பாராம். சபையில் குதூகலம் குதியிடுமாம். 'அவளும் நானும் ஜோடி' என்றதுதான் தாமதம் கொட்டகையில் பெருஞ்சிரிப்பே வெடிக்குமாம். தொடர்ந்து வாடி, மோடி, கூடி, என்று மேலே மேலே போய்க்கொண்டிருப்பாராம்.

வாயை அசைக்காமல் 25 வடைகளை விழுங்குவாராம் இந்தக் காட்சி நடக்காவிட்டால் ரசிகர்கள் கலாட்டா செய்வார்களாம். இவ்வேளை நடிகமணி வி. வி. வைரமுத்துவின் சக விகட நடிகர் பருத்தித்துறை சின்னத்துரையை நினைக்க நேருகிறது. காலகண்டையராக வரும் கட்டத்தில் பத்துக்கு மேற்பட்ட வாழைப்பழங்களை 'லபக் லபக்' என்று தொண்டைக்குள் எறிவதுண்டு பார்க்க சிரிப்பு சிரிப்பாய் வரும். அந்தக் கால நகைச்சுவைகள் மேடை நாடகங்களில் இப்படி இருந்தன இரட்டை பொருளில் வம்பு பேச்சு வந்தால் ரசிகர்களுக்கு தேனுண்ட மாதிரித்தான். இன்றைய மேடை திருந்திவிட்டது. ஆனுல் நாடகத்தின் சேப் சினிமாவில் அப்பட்டமான பாலியல் காட்சிகள், ஆட்டங்கள், அணைப்புக்கள், டிஸ்கோ நடனங்கள், இல்லையெனில் மண்டபம் காலி. ரசிக நிலை அன்றும் இன்றும் ஒரே நிலையில் தானு?

### ஆணவம் அழிந்தது' -இசைநாடகம்

கல்வித் திணைக்களம் நடாத்திய நாடகப் போட்டியில் கனிஷ்ட பிரிவு இசைநாடகத்துக்குரிய முதலாம் இடத்தை, கரவெட்டி திரு இருதயக்கல்லூரி பெற்றது. இதனை ஆக்கி நெறியாள்கை செய்தவர் ஆசிரியர் கே. ஜி மகாலிங்கம் அவர்கள். மோகனம், கானடா, முகாரி உட்பட பல இராகங்களை, நாடக மெட்டுப் பாடல்களை கீழ்வகுப்பு மாணவர்களைக் கொண்டு முறைப்படி பாடி நடிக்கச் செய்வது கிள்ளுக் கீரை விடயமல்ல. முயற்சி போற்றப்பட வேண்டியதே புதிய நாடக வடிவ அமைப்புக்களோ உத்திப் பிரயோகங்களோ நாடகத்தில் இடம்பெருதமை குறையாகத் தென்பட்டது.

இரணியன், கஜாது, சுக்கிராச்சாரியார் பாத்திரங்களைத் தாங்கியோர் தரத்தினை பிரகலாதன், மற்றும் சிறு பாத்திரங்களை தாங்கியோர் எய்தி இருந்தால் நாடகத்தின் தரம் மேம்பட்டிருக்கும். பாத்திரங்களின் அநாவசிய அசைவுகள் தேவையேயில்லை. தவிர்த்திருக்க வேண்டும்.

ஏ.ரி.பொன்னுத்துரை

களப்பயிற்சி செய்து பின் நாடகப் பயிற்சி, மேடையேற்றம் நிகழ்வதனுல் இக் குறைகள் நீங்க இடமுண்டு.

அதிபரும், ஆசிரியர்களும் பரிசுபெற்ற மாணவர்களுக்கு தேநீர் விருந்தளித்து ஊக்கிய நிகழ்ச்சியை காண நேர்ந்தது. இம் மனேநிலை பல அதிபர்களிடம் ஆசிரியர்களிடம் இல்லை கலைப்போட்டிகளுக்கு மாணவர்களை ஊக்காதவர்கள், 'அத்துக்கு' பங்குபற்றச் செய்பவர்கள், நாடகம் போன்றவற்றை எள்ளி நகையாடுபவர்கள் என்றெல்லாம் பலரகப் பிரகிருதிகள் இருக்கும் இக்காலகட்டத்தில், சாதாரண மகாவித்தியாலயமாய் இருந்தும்கூட, செலவினம் 1000 ரூபாவை எட்டும் என உணர்ந்தும் கூட மாணவர்களின் ஆளுமை வளர ஊக்கிய அதிபர் திரு சி. வின்சென்ற், ஆசிரியர் கே, ஜி. மகாலிங்கம் பாராட்டுக்குரியவர்களே. இன்றைய சூழ்நிலையில் பாடசாலைகளும் இசை நடன நாடகப் பயிற்சிகளை கைவிட்டால் எக்களத்தில் கலைப்பண்ணைக்கு புதுப்புனல் பாய்ச்சுவது? தமிழ் கலைகளை கருக விடுவதா?

### "இராமநாதன்" நாட்டியநாடகம்

இராமநாதன் கல்லூரியில் நிறுவுனர் நினைவுவிழா கடந்த மாதம் நிகழ்ந்தது. அதிபர் திருமதி. புவனேஸ்வரி சச்சிதானந்தம், இரு நிறைவேறிய விடயங்களையும் நிறைவேற உள்ள அபிலாசை ஒன்று பற்றியும் பிரஸ்தாபித்தார். சேர். பொன். இராமநாதனின் வாழ்வு பற்றிய அறிவை கவியரங்கு மூலம் மாணவரிடம் புகுத்த வேண்டுமென்ற எண்ணம், கவிஞர் வீரமணி ஐயர் தலைமையில் கடந்த ஆண்டு கலாரூபம் பெற்றது எனக் குறிப்பிட்டார். இரண்டாவது ஆசை கவியரங்கு கவிதைகள் நூலுருப்பெற வேண்டும் என்பதாகும். யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் துணைகொண்டு நூலும் வெளியிடப்பட்டது. இக்கவிதைகளை அடியொற்றி இராமநாதன் வாழ்வைச் சித்திரிக்கும் வகையில் நாட்டிய நாடகம் ஒன்றை மேடையிட எண்ணியுள்ளோம் எனவும், பொறுப்பினை நடன வல்லுநர் வீரமணி ஐயர் மேற்கொள்வார் எனவும் அதிபர் அறிவித்தபோது கரகோஷம் நிலவியது. துரிதமாய் தொழிற்பட தாம் தயாரென வீரமணி ஐயர் உறுதி கூறினுர். 1986ல் தரமான கலைப் படைப்பை மாணவ உலகும் கலை உலகும் எதிர்பார்க்கிறது.

# கவிஞர் தேவதாசனின் வெடியரசன்

—நாடகம்—

## அங்கம் பதின்மூன்று

இடம்: பூம்புகார்.

பங்குகொள்வோர்: சோழப் பேரரசன், கரிகால்வளவன், மாநாய்கர், மாசாத்துவான், மீகாமன், அரசவை உறுப்பினர்கள்.

நிலைமை: மாநாய்கரும், மாசாத்துவானும், வெடியரசனிடம், அரவின் மணி எடுப்பதற்காக, மீகாமனை வெடியரசனிடம், அனுப்புவதற்கு அனுமதி கோரி வருதல்.

கரிகால் சோழன்: வணிகப் பெருமக்களே! சேர, சோழ, பாண்டிய நாட்டில், அரவின்மணி, இல்லையாம். தங்களுக்கு உதவி செய்ய முடியாமைக்காக வருந்துகின்றேன்.

மாநாய்கர்: அரசே! இந்த அரவின் மணியானது ஈழநாட்டிலே, யாழ்ப்பாண இராச்சியத்தில், நெடுந்தீவு இராசதானியை ஆளும், வெடியரசனிடம் இருப்பதாக அறிந்தோம். அதை எடுப்பதற்கு, ஈழதேசம் போக, "கடலரசி" என்ற கப்பலை, செய்து வைத்திருக்கின்றோம். கப்பல் கொண்டு போவதற்கு, தளபதி மீகாமனை அனுப்புவது சாலச்சிறந்ததென்று பலர் கூறுகின்றனர்.

மாசாத்துவான்: வேந்தே! அதியரசன் பரம்பரையில் வந்த மீகாமன், காகுத்தனின் மகனென்று கூறப்படுகின்றான். அவன் கரையோரப் பகுதிகளையெல்லாம் தன்பலத்தால் அடக்கி, வைத்திருக்கின்றான். கப்பல் ஓட்டுவதிலும், கப்பல் செலுத்துவதிலும் சிறந்த வீரன். தளபதி மீகாமனை, வெடியரசனிடம், அனுப்புவது சிறந்தென்று எண்ணுகின்றோம். அதற்காக உமது அனுமதியை நாடி வந்தோம்.

கரிகால்சோழன்: ஏவலனே! எனது தளபதி மீகாமனை வரும்படி சொல்!

(மீகாமன் வரல்)

அரசே! என்னை அவசரமாக அழைத்த காரணம் என்னவோ?

கரிகால சோழன்: இதோ! இச்சபையிலே நிற்கும் காவிரிப்பூம் பட்டணத்தின் பெருவணிகர்களான, மாநாய்கரும், மாசாத்துவானும், தங்கள் மக்களாகிய கண்ணகிக்கும், கோவலனுக்கும் திருமணம் செய்வதற்கு தீர்மானித்துள்ளார்கள்.

மீகாமன்: அதற்கென்ன அரசே!

கரிகாலவளவன்: அவர்கள் குலமுறைப்படி பெண்ணிற்கு, காலில் அணிவதற்கு, காற்சிலம்பு இரண்டு செய்ய வேண்டியுள்ளது.

மாசாத்துவான்: தளபதியாரே! அந்தக் கால்சிலம்புக்கு நாகமணியை பரலாக, வைக்கவேண்டுமென்பது எனது மைத்துனனின் விருப்பமாகும்.

கரிகாலவளவன்: அந்த அரவின் மணியோ! சேர, சோழ, பாண்டிய நாட்டிலில்லை.

மீகாமன்: வேறு எங்கே உள்ளது. சொல்லுங்கள் அரசே! எங்கிருந்தாலும் கொண்டு வருகின்றேன்.

மாநாய்கர்: அந்தப் பாந்தள்மணி ஈழதேசத்தில், நெடுந்தீவு இராசதானியை ஆளும், வெடியரசன், என்கின்ற அரசனிடமே இருக்கின்றது. அதை ..

மாசாத்துவான்: அதை எடுப்பதற்காக, தங்களுக்கு "கடலரசி" என்ற கப்பலைச் செய்து, ஈழதேசம் போவதற்கான ஆயத்தங்கள் எல்லாவற்றையும் செய்து வைத்திருக்கின்றோம்.

கரிகால்வளவன்; மீகாமா! சிங்கம் போல் நின்ற நீர், வெடியரசன் பெயர் கேட்டதும், முகம்வாடி, நடுநடுங்குகின்றாய். ஏனிப்படி. வீறுநடைபோடும் மீகாமா! காகுத்தன் பரம்பரையின் கடலரசே! ஏன்பயப்படுகின்றாய்?

மீகாமன்: அரசே! ஸ்ரீ-கிருஷ்ணுந்த மூர்த்தியினுடைய வலது தொடையில் தோன்றிய, பிள்ளையாகிய "குகன்" என்ற வனும், "வெடியரசன்" என்ற முக்குகர்களின் தலைவனுகிய, நெடுந்தீவை ஆளும் அரசனிடத்தில் உண்டென்பது எனக்கும் தெரியும். ஆனால், வெடியரசனை வெல்ல என்னால் முடியாது. தயவு செய்து என்னை இயமபுரத்துக்கு அனுப்பும் காரியத்தை செய்யாதீர் வேந்தே!

மாசாத்துவான்: இமயத்தில் புலிக்கொடி நாட்டி, உலக மக்களனைவரையும், கிலிபிடிக்கச் செய்யும், சோழப்பேரரசன் தளபதியா? இப்படி பேசுவது? கேட்கவே வெட்கமாக இருக்கின்றது.

மீகாமன்: வணிகப் பெருந்தகையே! வெடியரசனுக்கு வீரநாராயணன், விளங்குதேவன், போர்கண்ட வீரன், ஏரிளங்குமரன் ஆகிய சகோதரர்கள் உண்டு. வெடியரசனை வெல்லுவதென்றால், முதலில், அவனின் நான்கு சகோதரர்களையும் வெல்ல வேண்டும். என்னால் முடியாது அரசே!

கரிகால்வளவன்: மீகாமா! மாநாய்கரின் மகள் கண்ணகியோ! அம்மனின் அவதாரத்திலொன்றெனக் கூறுகின்றார்கள். நீ அம்மனுக்காக இதைச்செய். உலக மாதாவாகிய, அம்பிகையில், நம்பிக்கை வைத்தோர் கைவிடப்படமாட்டார்கள். துணிந்து போ!

மீகாமன்: காகுத்தன் பரம்பரையில் பிறந்தவென்னை, இமயத்தில் புலிக்கொடி நாட்டிய சோழப் பேரரசின் தளபதியாக்கி, மணிமகுடம் தந்து, அணிபல தந்து, பணிகள் பல அகிலம் போற்ற செய்ய வைத்தனீர், இந்த வணிகர்களுக்காக, என்னை கூற்றுவன் புரம் அனுப்புவதற்கு ஏன்! அரசே தீர்மானித்தீர்கள்.

மாநாய்கர்: மும்முடிச் சோழனுக்கு அவமானம். உம்மை நம்பி நாம் செய்த செலவெல்லாம்...

(11ம் பக்கம் பார்க்க)

# வீடியோ

## ★ புதிய தொழிலும்

## ★ இன்றைய வீழ்ச்சியும்

கந்தையா நடேசன்

அண்மைக் காலத்து நம் நாட்டு நிகழ்வுகள் சமூகத்தில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி இருக்கின்றன. குறிப்பாகத் தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்களில் உண்டாகி இருக்கும் தாக்கம் ஆழமானவைகளாகவும் பெரிதும் மாறுபட்டவைகளாகவும் காணப்படுகின்றன. விசேடமாகப் பொருளாதார ரீதியான மந்தநிலைமையையும்சிக்கல்களையும் தமிழ்பிரதேசங்களில் உருவாக்கி இருக்கின்றன. இவற்றுட் சினிமாத்துறையும் மிக முக்கியமான ஒன்றாகவே காணப்படுகின்றது.

சினிமா என்னும் பொழுதுபோக்குச் சாதனம் சமூகத்தின் மேல்மட்டத்தில் வாழும் பெரியமனிதர்களுக்கு மாத்திரமன்றி, கீழ்மட்டத்தில் வாழும் ஏழை எளிய மக்களுக்கும் பயன்படும் ஒன்றாகவே இருந்து வருகின்றது. தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரதேசங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளைவிடக் குழப்பமும் பீதியும் தலைவிரித்தாடும் அபாயப் பிரதேசங்களாக இருப்பதால் கடந்த காலங்கள் போல இரவுக்காட்சிகளுக்கு மக்கள் சினிமாத் தியேட்டர்களை நோக்கிச் செல்வதற்கு முடியாத நிலைமைக்கு உள்ளாகி இருக்கின்றனர். இதன் காரணமாகவே பட்டணப் பகுதிகளில் மூலைக்கு மூலை 'மினி சினிமாக்கள் பகல் நேரக் காட்சிகளாக இன்று காட்டப்படுகின்றன. இதனால் சினிமாத்தியேட்டர் உரிமையாளர்களாக இருக்கும் முதலாளிகளும், இத்தியேட்டர்களிற் பணிபுரிந்த நூற்றுக் கணக்கான தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாகத் தொழிலாளர் தமது வேலைகளை இழந்து தமது குடும்பங்களைப் பாதுகாக்க முடியாத கஷ்டநிலைக்குள்ளாக்கப் பட்டுள்ளனர்.

தமிழ்ப்பிரதேசங்களிற் சினிமாத் தியேட்டர்களின் வீழ்ச்சிக்கு நாட்டின் பதற்ற நிலை மாத்திரம் காரணமென்று கொள்ள இயலாது. இன்றுள்ளது போன்று பதற்ற நிலைமை இல்லாது விடினும் இன்றைய அரசின் கட்டுப்பாடற்ற இறக்குமதிகளும். வெளிநாட்டு உழைப்பும் இத்தகைய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதாகவே அமைந்திருக்கும். அபரிமிதமான தொலைக்காட்சிப் பெட்டிகளின் இறக்குமதி மக்கள் சினிமாத்தியேட்டர்களை நோக்கிச் செல்வதனை மட்டுப்படுத்தியே இருக்கும், ஏராளமான தமிழ் கலைஞர்கள் இன்று வெளிநாடு சென்று பொருள் தேடுவதால். அந்த இளைஞர்களின் வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பயன்படுத்தத் தகுந்த வசதியும் சமூக அந்தஸ்துத் தேவையும் ஏற்பட்டிருக்கிறது. இதனால் தத்தம் வீடுகளிலிருந்து கொண்டே சினிமாப் படக் காட்சிகளைப் பார்க்கத் தகுந்த வாய்ப்பிருப்பதனாலும் மக்கள் சினிமாத் தியேட்டர்களை நோக்கிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லாது போயிற்று.

வீடியோ படக்காட்சிகள் இந்த நாட்டில் பரவலாக ஆரம்பித்து ஏறக்குறைய ஏழு அல்லது எட்டு ஆண்டுகளே ஆகின்றன. இது ஆரம்பித்த தொடக்க காலத்தில் குக் கிராமங்கள் தோறும் கட்டணம் அறவிடப்பெற்று காட்சிகள் இடம்பெற்று வந்தன, இன்று இந்த நிலைமையில மாற்றம் உருவாகி. வீடுகள் தோறும் வீடியோப் படக் காட்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனால் தோன்றி இருக்கும் சமூக விளைவுகளை விடுத்து வர்த்தக நிலைப்பட்ட மாற்றங்களை நோக்குவோம்,

வீடியோப் படங்கள் இந்த நாட்டுக்கு இறக்குமதியான ஆரம்பகாலத்தில் மாதம் ஒரு புதிய படமே இங்கு வந்து சேர்ந்தது, ஒரு படக்கொப்பியை விலை கொடுத்து வாங்கும் முதலாளி அக்கொப்பிக்காக நாற்பத்தையாயிரம் அல்லது ஐம்பதாயிரம் ரூபாவைக் கொடுக்க வேண்டி இருந்தது. அந்தக் கொப்பியிலிருந்து பிரதியைப் பதிவு செய்து கொள்ளும் ஒவ்வொருவரும் குறைந்தது ஆயிரத்தைநூறு ரூபாவை மூலக்கொப்பியை இறக்குமதி செய்திருக்கும் முதலாளிக்கு வழங்கி வந்தனர். பிரதிசெய்வோர் குறைந்தது ஐந்து தடவைகளாவது மீளவும் அந்தப் படத்தைப் பதிவு செய்யத்தகுந்தவைகளாகவும் அவை இருந்தன.

இப்பொழுது மாதம் முப்பது புதிய வீடியோ படங்கள் வரை இறக்குமதி செய்யப்படுகின்றன. இவற்றை இறக்குமதி செய்யும் முதலாளி ஒரு படக்கொப்பியை ஆயிரத்து இருநூறு ரூபாவுக்கு இனறு விலைகொடுத்து வாங்கி விடுகின்றார். குறிப்பிட்ட அந்த மூலக்கொப்பியிலிருந்து படத்தைப் பிரதிசெய்வதற்கு எழுபத்தைந்து ரூபா மாத்திரமே இன்று அறவிடப்படுகின்றது. அத்துடன் ஒருதடவை பதிவு செய்யப்பட்ட படம், மீளவும் பதிவு செய்ய இயலாதவைகளாகவே இருக்கின்றன.

வீடியோ படக்கொப்பிகளைப் பொதுமக்களுக்கு வாடகைக்கு விநியோகிப்பதற்கென ஆரம்பிக்கப்பெற்ற வர்த்தக நிலைப்பட்ட ஸ்தாபனங்கள் பல இந்தப் பிரதேசத்தின் எல்லா நகரங்களிலும் இன்று இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த விநியோக நிலையங்கள் ஆரம்பத்தில் மாதம் இருபத்தையாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் புதிய புதிய வீடியோப்படங்களைப் பதிவு செய்து கொள்வனவு செய்து வந்திருக்கின்றன. ஒருநாளில் சராசரி எழுபத்தைந்து முதல் நூறு கொப்பிகள் வரை பொதுமக்களுக்கு விநியோகம் செய்து வந்திருக்கின்றன.

இன்று ஆயிரம் வீடியோப் படக் கொப்பிகள் உள்ள விநியோக நிலையத்தில் ஐந்து அல்லது ஆறு படக் கொப்பிகளையே ஒரு நாளைக்கு விநியோகிக்க முடிகிறது. முன்னர் ஒரு படக்கொப்பியை இருபது ரூபாவுக்கு விநியோகம் செய்தநிலையங்கள் சில இன்று ஒரு தினத்துக்குரிய கட்டணமாக ஐந்து ரூபாவை அறவிட முன்வந்தபோதும் வீடியோ படக்கொப்பிகளின்மேல் மக்களுக்கிருந்து வந்த நாட்டம் அருகிக்கொண்டேவருகின்றது. இதனால் அண்மைக்காலத்தில் ஆரம்பித்த வீடியோப்படக் கொப்பி விநியோகிக்கும் புதிய தொழில், தோன்றி வளர்ந்த வேகத்தில் வீழ்ச்சி அடைந்து கொண்டே செல்கின்றது. இந்த வீழ்ச்சியின் காரணமாக விநியோக நிலையங்கள் சில மூடப்படும் நிலை உருவாகி இருக்கிறது.

இத்தகைய வீழ்ச்சி நிலைக்கான காரணங்களாகப் பல நியாயங்களைக் கவனத்திற் கொள்ளலாம். குறிப்பிட்ட சில இடங்களிலிருந்து, அந்த இடத்தைச் சூழவுள்ள சில மைல் தூரத்துள் தெளிவாகப் பார்க்கத் தகுந்த வண்ணம் தொலைக்காட்சியில் சினிமாப் படங்கள் ஒளிபரப்பப்படுவதால் மக்கள் வீடியோப்படக் கொப்பிகளை நாடவேண்டிய அவசியமில்லாது போனமை மிக முக்கியமான காரணம் எனலாம். நாட்டு நிலைமை காரணமாக மக்கள் வேதனையும் பீதியும் அடைந்திருப்பது இன்னொரு காரணமெனலாம். இவை மாத்திரமன்றி சினிமாத் தியேட்டர்களை நோக்கிச் செல்ல முடியாத முதியவர்களும் பாலர்களும் ஒன்றுகூடி இல்லங்கள் தோறும் வீடியோப் படக்காட்சிகளை கண்டு களிக்கும் வாய்ப்பு இன்று மக்களுக்குண்டு. ஆனால் குடும்பங்களோடு சேர்ந்திருந்து பார்க்கத் தகுந்தவைகளாக இன்றைய சினிமாப்படங்களிற் பெரும்பாலானவைகள் அமைவதில்லை.

யதார்த்தமான வாழ்வோடு இழைந்த சமூகக்கதைகளையே பெரும்பாலும் மக்கள் விரும்புகின்றனர். சினிமா என்ற பொழுதுபோக்குச் சித்திரங்கள் அடிப்படையில் வாழ்க்கை முன்னேற்றத்தின் உந்து சக்தியாக விளங்கவேண்டும். அவ்வாறுதான் அமையாதபோதும் வாழ்க்கையைச் சீரழிப்பவைகளாகவேனும் அவை இருக்கக்கூடாதல்லவா? காதலிப்பது ஒன்றைத் தவிர மனிதனுக்கு வேறு வேலையே இல்லை என்பதனையே பெரும்பாலான தமிழ்ச் சினிமாக்கள் சித்திரிக்கின்றன. பாலியற் கவர்ச்சி காட்டும் நடனங்களும், காட்சிகளும் இல்லாமல் தமிழ்ச் சினிமாக்கள் வெளிவருவதே இல்லை. இவற்றையே சினிமாவென்னும் கலையாகக் கண்டு கொண்டிருக்கக்கூடாது என்று அறிவார்ந்த உணர்வினை மக்கள் பெற்றுவிட்டார்களெனக் கூறமுடியாது. ஆனால் குறிப்பிட்ட இந்தச் சினிமாப் படங்களைக் குடும்ப உறவினர்களோடு கூடி இருந்து பார்ப்பதற்குப் பண்பாடும்நாகரிகமுமுள்ள மக்கள் வெட்கப்படுகிறார்கள். குடும்பங்கள் தோறும் வாழும் முதியவர்கள் அருவருப்படைகிறார்கள். அதனாலும் வீடியோப் படக்காட்சிகளைத்தமது வீடுகளிற்காட்டுவதனைப் பலர், இன்று வெறுக்கின்றனர், வீடுகளில மாத்திர

(11ஆம் பக்கம் பார்க்க)

# மகான் அரவிந்தரின் கல்விச் சிந்தனைகள்

பாரதநாட்டுப் பண்பாட்டு மேன்மையிலும், ஆத்மீகத் தலைமையிலும் அரவிந்தருக்கு மதிப்பிடமுடியாத நம்பிக்கையிருந்தது. தனது நாட்டின் பெருமை பற்றியும், எதிர் காலத்தில் தான் இழந்துள்ள மதிப்பினை பாரதநாடு மீண்டும் பெற்று உலகிற்கு வழி காட்டியாக உயரும் என்பது பற்றியும் அரவிந்தருக்கு சிறிதும் ஐயப்பாடு இருக்கவில்லை.

அவரது கருத்துப்படி பாரத நாட்டின் அடித்தளம் ஆன்மீகமாகும். மூவாயிரத்து ஐநூறு ஆண்டுக் காலமாக இந்நாடு பண்பாட்டுத்துறைகளில் செய்துள்ள ஆக்கப் பணிகள் மிக உயர்ந்தவை, பலதரப்பட்டவை. தத்துவம், அறிவியற்கலை, நுண்கலைகள், இலக்கியம், யோகம், அரசியல் போன்ற கலைகளெல்லாம் பாரத நாட்டினுல் மெருகூட்டப்பட்டது என்பது அவர் கருத்தாகும். இத்துறைகளிலெல்லாம் பாரத நாட்டின் அறிஞர்களின் படைப்புக்கள் அளவிடற்கரியன. அண்மைக் காலங்களில் பல்வேறு காரணங்களின் விளைவாக பாரதம் தனது ஆன்மீக உணர்வினை இழந்தது

பேராசிரியர்
ப. சந்திரசேகரம்

என்று கொள்வது முறையாகாது. அரவிந்தரின் கருத்துப்படி பாரதநாட்டின் மெய்யறிவுக் கொள்கை, வேதங்கள் மூலமும், உபநிடதம், பகவற்கீதை போன்ற நூல்கள் மூலமும் தெளிவாக்கப்படுகின்றன.

இவரது கல்விச் சிந்தனை அவரது தெய்வீக வாழ்க்கை என்கின்ற நூலிலிருந்து பெறப்படுகிறது. அங்கு நாம் காண்கின்ற கருத்து கல்வியென்பது ஞானம், தியானம், பத்தி, செயல்முறை. எனவே இவரது கல்வித்தத்துவம் இந்நூற்ருண்டின் புதிய கருத்துக்களைப் புறக்கணிக்காது பழமைக்கும் புதுமைக்கும் ஒற்றுமை காண்கின்றது.

மேல்நாடுகளின் தத்துவக் கொள்கைகளையும் பண்டைய தத்துவ உண்மைகளோடு தொகுத்து அரவிந்தர் அளிக்கிருர். அவர் வாழ்ந்த காலம் பாரதநாடு. தேசிய கலாச்சார கல்வி மறுமலர்ச்சியின் அரசியல் விடுதலையை வேண்டி நின்ற காலம். இவர் காந்தியடிகளுடனும் மக்கள் கல்வி விடுதலை பெறுவதன் மூலமும், மக்கள் உளவியல் விடுதலை பெறுவதன் மூலமும் பாரதநாடு விடுதலை பெறுமெனக் கொண்டார். இலண்டன் கேம்பிறிச் பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்ற இவர் ஐ சி. எஸ். இலும் தேர்ச்சி பெற்ருர். எனினும் அத்துறையில் அவர் பணியாற்ற அவர் விரும்பவில்லை. 1905ம் ஆண்டு வங்காளப் பிரிவினையின் போது நாட்டின் விடுதலைப்போரில் பங்கு கொண்டு தீவிர புரட்சி வாதியாக விளங்கினுர். இதன் விளைவாக பல வருடங்கள் இவருக்கு சிறைவாசம் கிடைத்தது. ஆனுல் 1910 ம் ஆண்டில் பொது வாழ்விலிருந்து விலகி புதுச்சேரியில் தங்கி ஆன்மீகப் பணியில் அரவிந்தர் உண்மையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். ஆன்மீக அரசியற்றுறைகளில் வழி காட்டிய அரவிந்தர் இவற்றுக்கு ஆதாரமான கல்வி முறைகளையும் கருத்துக்களையும் அளித்துள்ளார்.

இவரது கல்விக் கருத்துக்களை கர்மயோகி என்கின்ற இதழ்கள் மூலம் பெற முடிகின்றது. (காந்தி கரிசன) கல்வியென்பது உள்ளத்தின் சிறப்பு திறன்களை வளர்த்து வெளிக்கொணர்வது என்பது தத்துவமாகும். கல்வி பயனுள்ள கல்வியாக விளங்க வேண்டும். உள்ளத்தின் ஆற்றல்களெல்லாம் உயர்நிலையடைய கல்வியுதவ வேண்டும்.

கருத்தற்ற பொருளறிவு மட்டும் கல்வியின் இலட்சியமாக விளங்க முடியாது. கல்வி தனி மனிதனுக்கும் அவன் வாழுகின்ற நாட்டுக்கும், மனித சமுதாயத்துக்கும் உயர்வளிப்பதாக அமைதல் வேண்டும். இங்கு சிந்தனையாளர் ரூசோவுக்கும் அரவிந்தருக்குமிடையில் ஒற்றுமை காணமுடிகின்றது. மாணுக்கரது உள்ளத்தைப் பண்படுத்தி உயர்த்துதல் வேண்டுமென்று அவர் கொள்ளும் போது வள்ளுவர் கல்வியின் நோக்கம் குறையியல்புகளை வளர்த்தல் என்கின்ற கருத்துக்கும்,அரவிந்தர் கண்ட கருத்துக்கும் ஒற்றுமை காண்கின்றேம்.

வள்ளுவர் (பண்பு-குணயியல்பு)

அரவிந்தர் (உள்ளத்தின் பண்பினை உயர்வடையச் செய்வது)

உள்ளத்தின் பண்பு உயர்வு என்று கொள்ளும் போது உள்ளம் பண்டைய நினைவு நிலைகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்று கூறுகிருர்.

இதற்கு அடுத்த நிலை மனம் என்கின்ற அம்சம் உணர்ச்சிகளைப் பெற்று அவ்வுணர்ச்சிகள் அறிவாக உருவெடுக்க வேண்டும்.அடுத்ததாக இந்த உணர்ச்சிகளும் அறிவும் மக்களின் நுண்ணறிவுக் கூர்மையை வளர்த்தல் வேண்டும். கல்வியின் நோக்கம் ஆக்குதல், தொகுத்தல், பகுத்தாராய்தல் இந்நோக்கம் ஆசிரியர்களைப் பொறுத்தவரை முக்கிய நோக்கங்களாக விளங்க வேண்டுமென்பது அரவிந்தர் தருகின்ற கருத்தாகும்.அரவிந்தர் தருகின்ற மற்றுமொரு உயர்ந்த கருத்து உள்ளத்தின் உயர்ந்த நிலையான உயர் உள்ளம் எல்லோருக்கும் உரியதென்பதாகும். இக்கருத்து விமர்சனம் செய்யப்படவேண்டிய கருத்தாகும். பல உளவியல் வல்லுனர்கள் இன்றும் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மாணவர்கள் இந்நிலையையடைய ஆசிரியர் உதவியுடன் மாணவர் முயற்சியும் வேண்டுமென்பது அவர் கருத்தாகும். உள்ளமென்பது அதன் இயல்புப்படியே வளரும்.எனவே பெற்ரேம் ஆசிரியர்களும் தங்கள் விருப்பப்படி குழந்தைகளின் வளர்ச்சியை மாற்றமுடியாது. மாற்ற முயல்தல் தவறு என்பது அவர் கருத்தாகும். இங்கு கல்விச் சிந்தனையாளர்'புறபல்' அவர்களுக்கும் அரவிந்தர் அவர்களுக்கும் இடையே ஒற்றுமை காணப்படுகின்றது. கல்வியின் நோக்கம் உற்று நோக்கல், விடாமுயற்சி, தீர்மானம் எடுத்தல் போன்ற உளத்திறன்களுக்கு பயிற்சியளிப்பதாகும்.கல்வியின் முதன்மைநோக்கங்களின் ஒன்று கல்விக்கும் யோகப் பயிற்சிக்கும் இடையில் ஒற்றுமை காண்ப

(11ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர் கதை அமுதம்

# எதற்கும் முந்தி



கோவலூர் அரசர் குழந்தை போன்றவர்,
மந்தரான அந்த மன்னவர்
மந்திரி சொல்லிலே மயங்கிக் கிடந்தார்,
தந்திரியான அந்த மந்திரி
தன்னலங் கருதியே எதையும் செய்வான்.
உருசியான உணவென்ருலும்
''அதை தான் சுவைத்துப் பார்த்துச் சொல்லுவேன்''
என்றதை உண்ண முந்துவான் மந்திரி,
இந்த விதமாய் எதற்கும் முந்தி!
மந்திரி அரசபோகம் நுகர்ந்தான்;

இந்த விதமாய் நாட்கள் நடக்கையில்
ஆசை கூடிய அமைச்சன் அரசரை
மோசஞ் செய்யவும் நினைத்து, விடுகிருன்!
அரசரை இருட்டறைக்கு அழைத்துச் சென்ருன்,
தூக்குக் கயிறு தொங்கியது அங்கே!
நாக்குத் தடக்க மந்திரி 'மன்னு.
இந்த உலகினில் இனிமையே இல்லை.
அதோ பாருங்கள் சந்திர லோகம்
இதற்கும் மேலே இந்திர லோகம்
அதற்கும் மேலோர் அந்தர லோகம்!
அந்தர லோகம் அழகு மிக்கது,
''இந்தக் கயிற்றிலே கழுத்தைக் கொடுத்தால்
அந்தக் கணமே அந்தரலோகம்
காணலாம்'; என்று கரடி விடுகிருன்!

சூது இதை அறியாப் பேதை மன்னவர்
''மேதையே, நன்று நன்று'' எனக்கூறித்
தூக்கு மேடையிலே துள்ளி ஏறிக்
கழுத்திலே கயிற்றையும் மாட்டப் போனவர்,
ஏதோ ஒன்றை நினைத்தவராகிப்
''பாதகம் ஒன்றே நடக்கப் பார்த்தது;
மறந்து விட்டீரா மந்திரியாரே?
பறந்து வாரும்'' என்று கத்தினுர்.

''வருகிறேன்'' என்று குழறிக்கொண்டு
அருகு போய் நின்ற அமைச்சரைப் பார்த்து
எதற்கும் முந்தும் மந்திரியாரே
இதற்கு மட்டும் பிந்தி விட்டீரே!
அந்தர லோகம் எந்த விதமென
முந்தி நீர் சென்று வந்ததைச் சொல்லும்
அந்த வழியால் அடியேன் வருகிறேன்''
என்று கூறி இடியாய்ச் சிரித்து
பதிலுக்காகக் காத்திருக் காமல்
மந்திரி கழுத்திலே கயிற்றையும் மாட்டி
இறுக்கு இறுக்கென்று இறுக்கி விடுகிருர்!

மறுக்க முடியுமா மந்திரியாலே?
இறுக்கிய கயிறு மேலும் இறுகத்
தூக்குக் கயிற்றிலே தொங்கினுர் மந்திரி!
''எதற்கும் முந்தும் மந்திரியாரே!
இதற்கும் முந்தி விட்டவர் நீரே''
என்று பாடிக்கொண்டிருந்தாராம்
கோவலூர் அரசர் பாவமா மந்திரி.

✶ கவிஞர் பா.சத்தியசிலன்.

# போலிவேஷம் களைந்து சத்திய வேட்கையோடு எழுதுங்கள்!

★ என். கே. ரகுநாதன்

**1. 12. 85 ஈழமுரசு வாரமலரில் வெளியான கே. டானியலின் பேச்சுக்கு இருவர் எழுதிய பதில் இங்கு பிரசுரமாகின்றது:**

**— ஆசிரியர்**

எல்லாம் இலக்கியத்துக்குள்ளா செய்யலாம். நாங்கள் தானே எழுதுகிறவர்கள். எனவே செய்துவிட்டு எழுதலாம் எனச் சிலர் நினைக்கிறார்கள்.

சின்னத்தனம், சீரழிவுத்தனம், வெட்கப்படக்கூடிய காரியங்கள் எல்லாம் இலக்கியத்துக்குள் நடந்தால், பிறகு என்ன எழுத்தும் கணக்கும்?

அவர்கள் உள்ளதுகளை எழுதமாட்டார்கள். ஏனென்றால் அவைகள் எல்லாத்தையும் செய்து கொண்டு எப்படி உள்ளதுகளை எழுதுகிறது?

இவை, 1. 12. 85 ஈழமுரசு வாரமலரில் 'ஈழத்து இலக்கிய உலகின் சர்ச்சைக்குரிய விடயங்கள்' என்னும் தலைப்பில் வெளியான, 'அடிமைகள்' என்ற புத்தக வெளியீட்டு விழாவில, அதன் ஆசிரியர் கே. டானியல பேசிய பேச்சில தெரிவித்தவை.

அளவுக்கு மஞ்சி அடாவடித்தனம் பண்ணக்கூடாது. இவற்றைச் சிந்தியவர், தன்னுடைய வாழ்க்கையுடனும் இவைகளை ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது.

இலக்கியத்துக்குள்ளே மட்டும் சின்னத்தனம, சீரழிவுத்தனம, வெட்கப்படக் கூடிய காரியங்கள் செய்யக்கூடாது. சொந்தவாழ்க்கையில் அவற்றைச் செய்யலாமா என்று கேட்க விரும்புகிறேன் 'அப்படி என்ன செய்துவிட்டோம்', கேட்டால், நான் சொல்லத் தயாராயிருக்கிறேன். 'என்ன எழுத்தும் கணக்கும்?' என்று நான் திருப்பிக் கேட்கிறேன். 'அதுகளை (சின்னத்தனமான காரியங்களை) நாங்கள் செய்யிறதில்லை; ஆசையினாலே எழுதுகிறோம் 'என்று வீண் டம்பம் பேசினால் சரியா? களவெடுத்தவர் ''கள்ளன், கள்ளன்'' என்று சொல்லிக் கொண்டு, கள்ளனைத் துரத்துவதாகப் பாசாங்கு பண்ணிக்கொண்டு ஓடுகிறான்.. விபச்சாரி பத்தினிவேஷம் போடுகிறாள். சாத்தான் வேதம் ஓதுகிறது!

இந்த முத்துக்களை உதிர்த்தவர், கிழக்கிலங்கையிலிருந்து வெளியான 'தாரகை' என்ற பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியில், ஆரம்பகாலத்தில் தன்னை உருவாக்கியவர்கள் யார்? என்று கேட்ட கேள்விக்கு, எஸ். பொன்னுத்துரையுடன் என் பெயரையும் குறிப்பிட்டு, 'இதைச் சொல்வதற்கு என்ன வெட்கம்? 'என்று கூறியிருந்தார். பொன்னுத்துரை எங்கெல்லாமோ போய்ச்சேர்ந்த எழுத்தாளன்தான். எனினும் அவனும் நானும் தான் தன்னை உருவாக்கினோம் என்று மிகுந்த சங்கடத்தின் மத்தியில் கூறியிருக்கிறார்.

ஏனென்றால், நாங்கள் மூன்றாந்தர எழுத்தாளர்கள். இவர் முதல்தர எழுத்தாளர். இந்த ஆபாசப் பொன்னுத்துரைதான், இந்த முதல்தர எழுத்தாளரை, அவரது ஆரம்பகாலத்தில் பல சிறுகதைப் போட்டிகளில் பரிசுபெறச் செய்தவர். பொன்னுத்துரை குதிரை ஓட்டினாரோ, கழுதை ஓட்டினாரோ தெரியாது. அவருக்கு, இவர், நிறையச் சன்மானங்களை கொடுத்துப் பராமரித்துத்தான் எழுத்தாளனாக வரமுடிந்தது. இப்படியான சமயங்களில இவர் 'கொடையப்பவள்ளல்' ஆகிவிடுவார். மனைவியின் நகை நட்டுக்களை இழந்ததாகவும் பிரலாபித்தார்.

'இலங்கைச் சகோதரன்' என்ற சலவைத் தொழிலாளர் சங்கப் பத்திரிகையில், தனது முதலாவது காதல் கதையைப் பிரசுரித்துவிட்டு ஆவல்பட்டுக் கொண்டிருந்த வரை, இக்கட்டுரையாசிரியன்தான், முதன்முதல் கொழும்புப் பத்திரிகைகளுக்கு அறிமுகப்படுத்தினான். பின்னர், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வெளியிட்ட இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி அச்சேற அனுசரணையாயிருந்ததோடு, கதைகளைத் துப்புரவு செய்து, அழகிய பதிப்பாகவும் வெளிவர உதவி செய்தான்.

இவரது 'சிலுசிலுப்பு' நாவல் 'பஞ்சமர்' கையெழுத்துப் பிரதியை, அப்படியே பார்வதி அச்சகத்திலிருந்து அள்ளிக் கொண்டு போய் 'பொலிஷ்' பண்ணிக் கொடுத்து, 'புறாவ்' திருத்தி அழகிய நூலாக வெளிவரச் செய்ததுடன், 'பஞ்சமர்கள்' என்று இவர் சூட்டிய பெயரில, மேலதிகப் பன்மை விகுதியாய் நின்ற 'கள்'ளை நீக்கி, அழகிய வடிவம் கொடுத்தவனும் இவன் தான்!

ஏறிய ஏணியை உதைத்து விட்டுக் கொக்கரிக்கலாமா? சூரியனை உள்ளங்கையால் மறைத்துவிட்டுத் திமிர் கொள்ளலாமா? பரமேஸ்வராக் கல்லூரியில் நானும் பொன்னுத்துரையும் படித்துக் கொண்டிருந்த நாட்களில், நான் எழுதி, பொன்னுத்துரையிடம் 'பார்க்கக்' கொடுத்த கதையை, அவன் சுதந்திரனுக்கனுப்பித் தன் பெயரில் பிரசுரித்துவிட்டான். அவனைப் 'பொடியன்' என்று நான் சொல்லவில்லை. கருத்து வேறுபாடுகள் உள்ளவரானாலும் யேசுராசாவைப் பொடியன் என்று சொல்லலாமா? பதினைந்து வருடங்களுக்கு முன்பு பொடியனாயிருந்தால் இன்றும் பொடியனாய்த்தான் இருக்க வேண்டுமா? அவர் ஒரு கட்டுக் கதைகளைக் கொண்டு வந்து தெரிவுசெய்யக் கொடுத்தாராம். இவர் அதற்குள் ஒன்றிரண்டைத் தவிர மற்றவை தேறவில்லை என்று சொன்னாராம். இந்தப் பொடியன் யேசுராசாவின் தேறாத கதைகளையும் இந்த முதல்தர எழுத்தாளரின் மகத்தான படைப்புக்களையும் ஒன்றாகக் கணித்துத்தான் சாகித்ய மண்டலத் தராசு, ரூபா ஆயிரத்தை ஐநூறு ஐநூறாகப் பிரித்து இருவருக்கும் கொடுத்தது. எங்களை எடை போட்ட பிற்போக்கு அரசின் சாகித்ய மண்டலத்துக்கு என்ன தகுதி இருக்கிறது? என்று நம் கேட்கக் கூடும். மிகப் பெரிய சந்தோஷத்துடன் தனிக் கார் அமர்த்திக்கொண்டு சென்று அப்பரிசுத் தொகையைப் பெற்றுக் கொண்டு திரும்பி (சும்மா சொல்லக் கூடாது, இவருக்கு முதலும் ஒரு பரிசு கிடைத்தது ) நண்பர்களுடன் வெள்ளைக் கடற்கரையில் விருந்தும் கொண்டாடிவிட்டு, புரட்சிகர (?) எழுத்தாளர்களை வலை வீசிப் பிடிக்கவே. முதலாளித்துவ அரசு சாகித்ய மண்டலப் பரிசுகளை வழங்குவதாக அளந்த கதையை பஞ்சமர் I & II ஆம் பதிப்பில் வாசிப்போமாக!

## இலக்கிய சர்ச்சை

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு வதிரியைச் சேர்ந்த ஆ. ம. செல்வத்துரை என்பவர், 'தும்புகள், துரும்புகள், தம்பட்டக் கம்புகள் எல்லாம் சமூக சேவை செய்யப் புறப்பட்டு விட்டுதுகள்' என்று வீரகேசரியில் ஒரு கட்டுரை எழுதினார். இந்த மூன்று 'கள்'ளும் தாழ்த்தப்பட்ட சாதிக்குள்ளே மூன்று பிரிவினரை மறைமுகமாகக் குறிக்க உபயோகித்த சொற்கள். 'நாங்கள் தான் பெரியவர்கள்' என்ற அறியாமையில் பிறந்த வார்த்தைகள். 1969ல் வடமாகாணத்தைக் கலக்கிய மாவிட்டபுரப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இதே ஆ ம. செல்லத்துரை உட்பட்ட வதிரியைச் சேர்ந்த மிதவாதத் தலைவர்கள், ''கோயிலுக்குள்ளே சென்று தான் வணங்க வேண்டும் என்று நினைப்பது மடமைத்தனம். ஆசார சீலரால் எங்கு நின்றும் ஆண்டவனை வணங்கலாம்'' என்று பிற்போக்குவாதிகளுக்கு ஆதரவாய் அறிக்கை விட்டார்கள். திரு. ஆ.ம. செல்வத்துரை சில வருடங்களுக்கு முன் காலமானபோது, இந்த எழுத்தாளர், அவரின் சேவைகளைப் புகழ்ந்து அதே வீரகேசரியில் எழுதிவிட்டு, எஞ்சியிருந்த தீ. ஒ. வெ. ஜ இ. கடிதத்தாள்களைக் கையில் எடுத்துக் கொண்டு, தனது புத்தகங்களையும் சுமந்து கொண்டு அக்கிராமத்துக்குள் கால் வைக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்காளானார். இதற்குக் காரணம், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், தீரத்தோடு முன்னின்று நடத்திய ஆலயப் பிரவேசப் போராட்டம். தேனீர்க் கடைப் போராட்டம் முதலிய சாதி ஒழிப்பு இயக்கங்களில் அணிதிரண்டு போராடிய நிச்சாமம், மட்டுவில், மாவிட்டபுரம், கொடிகாமம், கன்பொல்லை, அச்சுவேலி போன்ற கிராமங்களின் தாழ்த்தப்பட்ட மக்கள், இந்தப் பிரபல எழுத்தாளரின் 'மகத்தான' சேவைக்கு விடை கொடுத்து விட்டது தான்!

இந்த இயக்கத்துக்குத் தலைமைதாங்கிய கம்யூனிஸ்ட் கட்சி பல பிளவுகளாகச் சிதறுண்டதால், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் செயற்பட முடியாத பரிதாப நிலை ஏற்பட்டது. முன்வரிசையில் நின்று போராடிய தோழர்கள், அடி உதைபட்டும், பொலிஸ் சித்திரவதைகளுக்குள்ளாகியும், சொத்துச் சுகங்களை இழந்து, கோடேறி வழக்காடியும் அடைந்த இன்னல்கள், தியாகங்கள் எல்லாம் அவர்களுக்கு எழுதத் தெரியாத காரணத்தால் மறைந்து போக, எழுதத் தெரிந்தவர்கள், புத்தகம் வெளியிட வசதி படைத்தவர்களே 'இரட்சகர்'களாக வர முடிந்தது.

'1962ல் வெளிவந்த இவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான (இ. மு. எ. ச. வெளியிட்டது) 'டானியல் கதைகளு'க்கும் பன்னிரண்டு வருடங்களுக்குப்பின், 1974ல் வெளியான 'உலகங்கள் வெல்லப்படுகின்றன' (வீரகேசரி வெளியீடு) என்ற தொகுதியிலுள்ள கதைகளுக்குமிடையில் பெரும் மாற்றங்களைக் காணமுடிகின்றது என்றும், பெரும்பாலான கதைகள் காமக் கிளர்ச்சியைத் தூண்டுபவையாகவே உள்ளன என்றும், பழிவாங்கும் உணர்ச்சினால, மேல்தட்டு வர்க்கப் பெண்கள் தாழ்த்தப்பட்ட இளைஞர்களினால சோரமிழைக்

(11ஆம் பக்கம் பார்க்க)

# டானியல் சொல்வது முழுப் பொய்!

★ அ. யேசுராசா

அவதூறுகளிற்கு மதிப்பளியாது புறக்கணிப்பதே சரியானது. ஆயினும் பரவலாய் வாசிக்கப்படும் வெகுஜனத் தொடர்பு சாதனமொன்றில் வெளிவந்திருப்பதன் காரணமாய், விளக்கவேண்டியிருக்கிறது.

1-12-85 'ஈழமுரசு' வில் வெளியாகியிருக்கும் கே.டானியலின் பேச்சில பின்வரும் பகுதியும் காணப்படுகிறது. ''... கிட்டத்தட்ட பதினைந்து வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் காலை ஒரு பொடியன் என்ரை வீட்ட வந்திருந்தார். கையில ஒரு பைல்; அதை என்னிடம் தந்தார்.

'இதில ஒரு பதினைஞ்சு கதை இருக்குது, நான் ஒரு தொகுதி போடப்போகிறேன். ஒரு பத்துக் கதையைத் தெரிஞ்சு எடுத்து, நீங்கள் தான் திருத்தியும் தரவேணும்' என்று அவர் கேட்டார்.

இதில் வரும் 'ஒரு பொடியன்' நான் தானென்று பேச்சின் பிறிதோரிடத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''.... இது நடந்து பதினைந்து வருஷத்துக்குப் பிறகு அந்த யேசுராசா தன்ரை 'அலை' சஞ்சிகையில் இப்ப எழுதுகிறார். டானியலை தாங்கள் எழுத்தாளனாக அங்கீகரிக்கவில்லை என்று. இது தான் பகிடி.''

1) டானியல் சொல்வது முழுப் பொய். இன்றுவரை டானியலின் வீட்டிற்கு ஒரு தடவை கூட நான் சென்றதில்லை, அவரது வீடு எதுவென்பதே எனக்குத் தெரியாது,

2) பதினைந்து வருடங்களுக்கு முன்னர் (அதாவது 1970ம் ஆண்டில்), சிறுகதைத் தொகுதி எதனையும் வெளியிட நான் முயலவேயில்லை. அந்த நாட்களில் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருந்த— கொழும்பில் கடமையாற்றிக் கொண்டிருந்த நானும் முக்கிய உறுப்பினராயிருந்த— கொழும்பு கலை, இலக்கிய நண்பர் கழகத்தின் ஏனைய உறுப்பினர்களான நெல்லை க பேரன், சாந்தன், சி. வன்னியகுலம், குப்பிழான் ஐ. சண்முகன், மாவை நித்தியானந்தன் போன்றோரிடம் யாரும் இதனைப் பரிசிலித்துக் கொள்ளலாம்;

3) 1974 மார்கழியில் வெளிவந்த 'தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்' என்ற எனது தொகுதியின் 'என்னுரையில்' ''......1966-1974 க்குமிடைப்பட்ட காலத்தில் பதினொரு சிறுகதைகளை மட்டுமே எழுதினேன், 'கோடை இடிகள்' என்ற முதலாவது கதை தவிர்ந்த ஏனையவை இத் தொகுதியில் இடம் பெறுகின்றன'' என்ற வரிகளைக் காணலாம். 1974 லேயே பதினொரு கதைகளை மட்டும் தான் நான் எழுதியிருக்க, 1970ம் ஆண்டில் பதினைந்து கதைகளை டானியலிடம் நானெப்படிக் காட்டியிருக்க முடியும்?

4) அப்படியானால், இவ்வாறான பொய்களின் மூலம் அவதூறு பரப்ப டானியல் ஏன் முனைகிறார்? காரணம் இருக்கிறது. ஒரு தீவிர வாசகன் என்ற முறையில டானியலின் எழுத்துக்கள் என்னை ஒரு போதுமே கவர்ந்ததில்லை, பொறுமையைச் சோதிக்கும் எழுத்து அவருடையது. ஓர் அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காக மட்டுந்தான், சகிப்புத்தன்மையுடன் அவரது எழுத்துக்களை படிக்கும் நிர்ப்பந்தத்தினை, நான் ஏற்றுக் கொள்ளுவது வழக்கம். 1975ல் வெளிவந்த எமது 'அலை' யின் முதலாவது இதழிலிருந்து வேறு இதழ்களிலும், 1982ல் சென்னையில் நடைபெற்ற 'எழுபதுகளில், கலை இலக்கியம்...' இலக்கு கருத்தரங்கிலும். தமிழ் நாட்டிலிருந்து வரும் 'சதங்கை' இலக்கிய இதழிலும், இலங்கையில் பல இலக்கியக் கூட்டங்களிலும் டானியலின் படைப்புக்களது பலவீனங்கள் பற்றி நான் குறிப்பிட்டுள்ளேன். இவற்றை எதிர்கொள்ள முடியாத இயலாமையும் அவருக்கே உரித்தான 'தாழ்வுச் சிக்கலும்' காரணமாக உருவாகும் எரிச்சலினாலேயே, இவ்வாறான பொய்களைச் சொல்கிறார். அவர் மீது அனுதாபப் படுவதை விட நாங்கள் வேறென்னதான் செய்யலாம்?

## வெடிய...

...8ம் பக்கத் தொடர்

கரிகால்சோழன்: மீகாமா! நீ வீரம் செறிந்த வெடியரசனின் கடலோரம் சென்று அவனை வணங்கி, பவானியின், அவதாரமாகிய, கண்ணகிக்கு காற்சிலம்பு செய்வதற்கு, நாகரெத்தினத்தை பரலாக வைக்கவேண்டி எடுப்பதற்கு வந்தேனென வணிகர்கள் கொடுத்த, விலைமதிக்க முடியாத வெகுமதிகளை, அலைசூழ்ந்த நாட்டையாளும், வெடியரசனிடம் கொடுத்து இரந்து கேள்! அம்மனுக்காகத் தந்து விடுவான் பயப்படாதே! போ!

மீகாமன்: அரசே! தேங்காய்க்குள் இளநீர் எவ்வாறு அமைத்ததோ? அதைப்போல், வணிகரிவரின் பேச்சில், தாங்கள் மயங்கி என்னை, வெடியரசனிடம் அனுப்புகின்றீர்கள் எல்லாம் பிரமதேவன் விதித்தபடி நடக்கும். தங்கள் முடிவு அதுவானால், துணிகின்றேன்.

கரிகால்வளவன்: மீகாமா! கண்ணகியின், மங்கலவிழாவுக்கு நீர் நாகரெத்தினத்தை, வாங்கிவந்தால், எனது முடியையே உமக்குத் தருவேன்; தருமத்தின் செல்வியாம், உமாதேவியின், மறு அவதாரத்துக்காகச் செய்!

மீகாமன்:- சரி! அரசே! வணிகப்பெருமக்களே! "கடலரசி" கப்பலை ஆயத்தம் செய்யுங்கள்; நான் பந்தள் மணி, பணிவுடன் வாங்க, வேந்தன் வெடியரசனிடம் போகின்றேன்.

## அகில....

3ம் பக்கத் தொடர்

நினைவு கூர வேண்டும். அவர் தான் இணுவிலில் பிறந்து வளர்ந்த அளவெட்டி வி. தெட்சணாமூர்த்தி.

தவில்மேதை தட்சணாமூர்த்தி வலங்கைமான் சண்முகசுந்தரத்தின் மைத்துனர். இருவரும் சேர்ந்து வாசித்தால் இருபெரும் கடல்கள் ஒன்று சேர்வது போல இருக்கும். இந்தக் கடைசி வாய்ப்பு பெருமளவில் கொழும்பு ஆடிவேல் கலையரங்கில் சில ஆண்டுகளுக்கு முன் கிடைத்தது. இந்த இரண்டு மேதைகளுக்கும் ஒற்றுமை பலவும் உண்டு. வேற்றுமையும் உண்டு.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் கடைசிவரையும் யாழ்ப்பாணத்து "ஆளாகவே" வாழ்ந்தார். பிறந்தகம் யாழ்ப்பாணம். அவர் போற்றிய இடம் நல்லூர். எதுவந்தாலும் யாழ்ப்பாணத்துப் பெருமையை விட்டுக் கொடுக்கமாட்டார் நாவலர். தமிழ்நாட்டு ஆதீனம் ஒன்று ஒருமுறை நாவலரை ஆதீனத்திற்கு வரும்படி அழைத்தது. மகிழ்வுடன் அவ்வழைப்பை ஏற்றார் நாவலர்; ஒரே ஒரு நிபந்தனை போட்டார். "வருகை தருவோம்; அங்கவஸ்திரம் எடோம்" என்றார். ஆதீனகர்த்தர் "அப்படியே ஆகுக", என்றாராம். சால்வை இறங்கவில்லை. சிறப்பாக யாழ்ப்பாணத்துச் சால்வை ஈட்டிய பெருமை இது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஈழத்து மட்டக்களப்பு தமிழ்ப் பெருந்தகை விபுலானந்த அடிகளாரைத் தமது தமிழ்ப்பீடத்திற்கு வரும்படி அழைத்தது. "தமிழ்ப் பேராசிரியராக நியமித்தால் வருவோம்" என்றார் அடிகளார். இதனால் அடிகளார் உயரவில்லை. ஈழத்துத் தமிழ்ப்பரம்பரை உயர்ந்தது. இந்தப் பரம்பரையின் ஒரு கிளையில் வந்தவர் தெட்சணாமூர்த்தி. அவர் விரும்பியிருந்தால் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் குடியேறியிருக்கலாம்; ஆனால் அவருக்கு இணுவில் மண் காலில் ஒட்டாவிட்டால், அளவெட்டி காற்றைச் சுவாசிக்காவிட்டால் வாழமுடியாது.

யாழ்ப்பாணத்து மூளாய் சண்முகசுந்தரம் இன்று வலங்கைமான் ஆகிவிட்டார். யாழ்ப்பாணத்து அளவெட்டி தவில் மேதை தெட்சணாமூர்த்தி கடைசிவரையும் யாழ்ப்பாணத்தவராகவே வாழ்ந்து மறைந்தார். வலங்கைமான் தன் தனிப்பெரும் வித்தையைப் பரப்புவதுடன் தனிப்பெரும் சீடப் பரம்பரை ஒன்றையும் உருவாக்குவாராக!

## மகாபாரதப்....

(8ம் பக்கத் தொடர்)

பெய்வது யுத்த முறையல்ல! மறைந்திருந்து தாக்கும் முறைகள் பிரகடனப் படுத்தப்பட்ட யுத்தத்தில் இடம் பெறுவதில்லை. இராமாயணத்திலும், வாலியும் சுக்கிரீவனும் யுத்தஞ் செய்யும் பொழுது தன்னோடு போர் புரியாத வாலிக்கு இராமன் எய்து குற்றவாளியாக நிற்பதைப் பார்க்கிறோம். இராமாயண காவியம் இருக்கும் வரை இராமன் ஏன் இத்தகைய பழிச்செயலைச் செய்தான் என்ற சர்ச்சை தொடர்ந்து கொண்டு தானிருக்கும்.

கர்ணனால் கவசமும், வில்லும், தேரும் அழிக்கப்பட்டு நின்ற அபிமன்யுவின் ஒரு கையை அறுத்தார் துரோணச்சாரியார்: அதன் பின்பு போர் செய்து, அபிமன்யுவின் தலையை அறுத்தான் சயத்திரதன் என்று வில்லிபுத்தூராழ்வார் குறிப்பிடுகிறார். மறைந்திருந்து தாக்கும் யுத்த முறை மீறல், தனுர்வேதத்தைக் கரை கண்டவரும், கௌரவ! பாண்டவர்களுக்கு வில்லாசிரியரும், ஆகிய துரோணச்சாரியாரின் தூண்டுதலால் நிகழ்த்தப் பட்டிருக்கிறது. யுத்தம் தோன்றிவிட்டால் தர்மம் ஏது, நியாயம் ஏது, பெரியோர் ஏது, சிறியோர் ஏது எல்லோருமே தர்மங்களை, சட்டங்களை, நியாயங்களை மீறத் தொடங்கி விடுகிறார்கள்,

(தொடரும்)

## வீடியோ...

(7ம் பக்கத் தொடர்)

மன்றி, ஆலயங்களில் இடம் பெறும்வைபவங்கள் திருவிழாக்களிலும் இசை நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் என்பவற்றுக்குப் பதிலாக வீடியோப் படக்காட்சிகளே அண்மைக் காலத்தில் இடம் பெற்று வந்திருக்கின்றன, தற்போது வீடியோப் படக்காட்சியில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி சமூகத்தில் உண்டாக்கக் கூடிய சாதக பாதக நிலைமைகளை விடுத்து, வீடியோப்படக் கொப்பி விநியோகத் தொழிலை ஆரம்பித்து நடத்தி வருபவர்களுக்குத் தொழிலடிப்படையிலான சரிவு என்பது இங்கு கருத்திற் கொள்ள வேண்டியதொன்றாகும். (நெல்லியடி குகா வீடியோ சென்ரர் ஆ கணநாதன் இக் கட்டுரை ஆக்கத்திற்கு வேண்டிய தகவல்களைத் தந்துதவினர்.)

## எளிமையே...

3ம் பக்கத் தொடர்

தையும் கொண்டுவந்து விடலாம், ஆனால் அதை உணர்ந்து கொள்ளக்கூடிய அளவுக்கு மக்களின் அடிப்படைக்கல்வி உயரவேண்டும். இல்லையெனில் பாஷையைப் புரிந்து கொள்ளலாமே ஒழிய விஷயத்தைத் தெரிந்து கொள்ள முடியாது.

★ தாய்ப்பால்

# குழந்தை அழும்போது பால் ஊட்டுவதே சிறந்தது

டாக்டர் க. ஜெயச்சந்திரன்

தாய்ப்பால் பிறக்கும் குழந்தைகளின் முதல் உணவு. இதில் பிள்ளைகளின் வளர்ச்சிக்குத் தேவையான உயிர் சத்துக்கள் அத்தனையும் நிறைவாக இருக்கின்றது. தாய்ப்பாலூட்டி வளர்க்கப்படாத குழந்தைகள் போஷாக்கின்றியவர்களாகவும், வளர்ச்சி குன்றியவர்களாகவும் காணப்படுவர். பாரம்பரியமாக எமது தாய்மார் குழந்தைகளுக்கு தாய்ப்பாலையே ஊட்டி வளர்த்து வந்துள்ளார்கள். இன்றும் கொடுத்துவருகின்றார்கள். தாய்ப்பாலூட்டுவது நாகரிகமற்ற செயலெனக் கருதவந்த மேல்நாட்டுப் பெண்கள் தாய்ப்பாலூட்டுவதை நிறுத்திவந்தனர். தற்போது தாய்ப்பாலின் முக்கியத்துவத்தைஉணர்ந்துள்ளனர்.

தாய்ப்பாலானது குழந்தையினது ஒரு சத்துணவு. அத்துடன் அதனை நாம் விலைகொடுத்து வாங்கவேண்டியதில்லை, அது தாயிடமே உண்டு. அத்துடன் மன வளர்ச்சிக்கும் முக்கியபங்கினை வகிக்கின்றது. தாய்ப்பாலில் புரதம், உயிர்ச் சத்துக்கள், காபோவைதறேற்று என்பன அடங்கியுள்ளன. இதில் எதிர்ப்புச் சத்திகள் இருக்கின்றபடியால் தொற்றுநோய்கள் ஏற்படுவதைத்தடுக்கின்றது.

குழந்தைகளுக்கு அது தானாக தாய்ப்பாலை மறக்கும் மட்டும் கொடுக்கப்பட்டு வந்தால் அடுத்த குழந்தைஜெனிப்பதை தடுக்கின்றது. ஆகவே தாய்ப்பால் கொடுப்பது இயற்கையான கருத்தடை முறையாகக் கணிக்கப்படுகின்றது.

மேலைநாடுகளில் மார்பு புற்றுநோய் பெண்களுக்கு ஏற்படுவதற்குக் காரணம் தாய்ப்பால் கொடுக்கப் படாமையே. பால் கொடாததினால் மார்பிலுள்ள பாலுசுரப்புக் கோளங்களில் பாலதங்கி, கட்டியாகி அக்கட்டியே புற்று நோயின் ஆரம்பத்திற்கு காரணியாகின்றது.

தாய்ப்பால் பற்றாக்குறை இருந்தால் மட்டுமே புட்டிப் பாலைக் கொடுக்கவேண்டும். எடுத்ததற்கெல்லாம் புட்டிப் பாலைக் கொடுக்க கூடாது. பசுப்பாலில் புரதச் சத்து அதிகமாக இருப்பதனால் அது குழந்தையின் சமிபாட்டிற்கு உகந்ததன்று. பசுப்பால் கொடுப்பதாய் இருந்தால் தண்ணீர் கலந்து காய்ச்சி கொடுத்தல் அவசியம். பசுப்பாலில் இரும்புச்சத்து மிகவும் குறைவாகவே உள்ளது. அத்துடன் உயிர்ச் சத்துக்களும் மிகவும் குறைவாகவே உள்ளது.

பிள்ளை பிறந்தபின் முதல் மூன்று நாள் வரும்பாலை நாம் கடும்பு பாலென கூறிக்கொள்கின்றோம். இப்பால்தான் பிள்ளைக்கு மிகவும் அவசியம். இக்கடும்புப் பாலில் எதிர்ப்புச் சக்திகள் அதிகம் அடங்கியுள்ளன. சில தாய்மார்கள் இப்பாலைக் கொடுக்கக்கூடாதென எண்ணி அதனை கொடுக்காமல் விடுகின்றார்கள். இது தவறான செயலென அவர்கள் உணர வேண்டும். பிள்ளை பிறந்து

12ம் பக்கம் பார்க்க

## மகான்...

(9ம் பக்கத் தொடர்)

தாகும். ஆனால் இவர் யோகமென்று கூறும்போது ஒரு மனிதன் தன்னை நிறைவு செய்து தானே உண்மைபெற எத்தனிப்பது யோகமெனக் கூறுவர். இக்கருத்து கிரேக்க ஆசிரியர்கள், திருமூலர் போன்ற தமிழ் அறிஞர்களும் கூறியுள்ளார்கள். இவர் வாழ்ந்த காலத்தில் தாய்மொழியே போதனாமொழியாக இருக்க வேண்டுமென்ற கருத்து நிலவாத காலம். (பாரதி பாடல்-அரவிந்கோஷ்)

கற்பித்தல் முறை பற்றிக் கூறும்போது கற்பித்தல் அண்மைய அனுபவங்களிலிருந்து தொடங்கி பின்னரே தொலைவான அனுபவங்களுக்கு செல்ல வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்துகிறார். இக்கருத்து ஆங்கிலக் கல்விச் சிந்தனையாளர் ஹேபர்ட்பென்சர் என்பவரின் கருத்தினை நமக்கு நினைவூட்டுகின்றது: உடல் நலம், உடல்வலிமை, உள்ளத்தின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியம் என்பது இவர் அடிக்கடி வலியுறுத்தும் கருத்தாகும். கல்வித்திட்டத்தில் மனித வளர்ச்சிக்கு உகந்ததான ஒழுக்க, சமயக்கல்விகள் இடம் பெற வேண்டுமெனபது இவர் தருகின்ற இன்னுமொரு கருத்தாகும். இக்கருத்தினையொட்டி காந்தியடிகளுக்கும், அரவிந்தருக்கும கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றது. ஒரு ஆசிரியன் மாணவனுக்கு துணைவனாக, நண்பனாக, வழிகாட்டியுமாக இருக்கவேண்டுமென்பது இவர் கருத்தாகும் இவர் வாழ்க்கைத் தத்துவங்களையும், கல்விக்கருத்துக்களையும் நடைமுறைப்படுத்தி செயலாற்றும் வகையில் இன்று புதுவையில் அரவிந்த ஆச்சிரமமும், அரவிந்த அகில உலகக் கல்லூரியும் விளங்குகின்றது. இவர் வலியுறுத்திய கல்வி அனைத்துலக ஆன்மீக ஒருமைப்பாட்டு கல்வி நெறியாகும்.

பாரதநாட்டுக் கல்வியாளர்களது கல்வித் தத்துவம், கல்விக்கருத்துக்கள் ஆகியவற்றிடையே பல ஒற்றுமைகள் இருப்பது தெளிவு. இவைகள் யாவையுமே கல்வியின் நோக்கம் முழுவளர்ச்சி பெற்று முழுமைபெற்ற ஒருவனுக்கு கூடிய முழுமையளிப்பதே கல்வியின் நோக்கமென்று கூறுகின்றார்கள். இவ்வாறு முழுமைபெறுவதற்கு சமய ஆன்மீக கூறுகள் மிக முக்கியமெனவும் கூறுவார்கள். ஆனால் சமயம, ஆன்மீகமென்று பிறகொள்ளும்போது ஆன்மீக மலர்ச்சிக்கு அறிவியல் அறிவு, நுண்கலைகள், சமயக்கல்வி, செயல்முறைக்கல்வி ஆகியன எல்லாம் அடங்குகின்றது, என்பது அவர் தருகின்ற கருத்தாகும். அறிவு வளர்ச்சி மட்டும் கல்வியாகாது என்பது பாரதச் சிந்தனையாளர் வலியுறுத்தும் கருத்தாகும். தனிமனிதனின் வளர்ச்சியை ஒப்பிடும்போது நாட்டின சமுதாயத்தின் வளர்ச்சிபற்றி இவர்கள் மறக்கவில்லை. முக்கியமாக பாரதக்கல்வி பாரதப் பண்பாட்டின் அடிப்படையில் அமைவதை இவா மிக வலிமையாகக் காட்டியுள்ளார். அத்தோடு கல்வி ஏற்பாடு காலநிலைமைக்கு ஏற்ப மாற்றம் பெற வேண்டும். எனினும் ஆன்மீக ஒழுக்க சமயக் கூறுகள் என்றென்றும் இடம்பெறுதல் வேண்டும். ஆசிரியமாணவர்களுக்கும்முக்கியம்எனபது இவர் கருததாகும்.

## போலி...

...10 ஆம் பக்கத் தொடர்

கப் படுவதாக எழுதித் திருப்திப்படுகிறார் என்றும், இது கையாலாகாத்தனத்தை வெளிப்படுத்தும் இலக்கிய சிருட்டிப்பு என்றும், 1973ல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை வெளியிட்ட 'ஆக்க இலக்கியமும் அறிவியலும' என்ற நூலில் இடம் பெற்ற எனது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கின்றேன்.

ஓர் எழுத்தாளன் எவ்வளவு தான் ஜம்பம் அடித்தும் என்ன? எத்தனை நூல்களை வெளியிட்டும் என்ன? 'ஒருவனுடைய வர்க்கத்தன்மை அவனுடைய செயல்கள் யாவிலும் வெளிப்படுவதைத் தவிர்க்க முடியாது!' என்ற மார்க்ஸிஸக் கோட்பாட்டை இங்கு நாம் மனதிற் கொள்ள வேண்டியுள்ளது.

மல்லிகை, டிசம்பர் 83 இதழில், டானியலைப்பற்றி ஏகத்தாளமாக எழுதிய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தன் மனச்சாட்சிக்குச் சற்றே இணங்கிப் போகவேண்டிய நிர்ப்பந்தம்ஏற்பட்டுப் போலும் கடைசி வாசகங்களில்—1950 களில் இருந்தடானியல் அன்று இன்றைய டானியல்...பலமாற்றங்கள். ஆனால் இந்த மாற்றங்களிடையே காணப்படும் ஒரு தொடர்புணர்வு... என்று திக்கித்திணறி எழுதியிருப்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

மல்லிகை மார்ச்-ஏப்ரல் 85 இதழில், என்னைப்பற்றிவந்த குறிப்புகளில், "30, 35 வருடங்களுக்கு முன்பு எழுதுவதற்குப் பேனா பிடித்தபோது, நெஞ்சில் ஒரு சத்தியநெருப்பு எரிந்தது. ஒரு புதிய உலகத்தைப் படைப்பதற்காகவே எழுதினேம். இப்போது இலக்கியம் என்றால் வெறும் பம்மாத்தாகப் படுகின்றது. புகழுக்காகவும், சமூக அந்தஸ்துக்காகவும், வேறு பின்னணி நோக்கங்களுக்காகவும் இலக்கியம் படைப்பதை நான் முற்றாக வெறுக்கிறேன். இலக்கியம் என்பது இலட்சியத்தினடியாகப்பிறக்க வேண்டும்!" என்று தெரிவித்தேன்.

இதனை மீண்டும் அழுத்தம் திருத்தமாகச் சொல்கின்றேன். எழுத்தாளர்களே! உங்கள் போலி வேஷங்களைக் களைந்து விட்டு வெளியே வாருங்கள். சத்திய வேட்கையோடு பேனாவை ஓட்டுங்கள்!

# A/L 86 Aug.

கலை, வர்த்தக வகுப்புகளுக்கான

## துரித மீட்டல் வகுப்புகள்

- திட்டமிடப்பட்ட முறையில் பயிற்சி
- NOTES தரப்படமாட்டா
- முற்றாக அச்சடிக்கப்பட்ட இலவச பாடக் குறிப்புகள்-
- 5 வருட வினாக்களுக்கு-விடை (Paper Class)

யாழ் நகரின் பிரபல ஆசிரியர்கள்:-

பொருளியல் :- திரு. கிருஷ்ணானந்தன்
கணக்கியல் :- திரு. வன்னியசிங்கம்
வர்த்தகம் :- திரு. தேவா, திரு. ரட்ணம்
அளவையியல் :- திரு. யுகபாலசிங்கம்
தமிழ் :- திரு. நாகேஸ்வரன்
இந்து நாகரிகம் :- திரு. வேதா
மற்றும் பலர்

**ஆரம்பம்: 1-1-86 (காலை 10 மணி)**

விபரங்களுக்கு : நேரில் / தபாலில்

**ASTAN INSTITUTE**
66/I. Hospital Road, Jaffna.



3ம் பிரிவு நாளை ஆரம்பம்!
**86 A/L DAY CLASS**
(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)
விபரங்கட்கு-
**NEW MASTER INSTITUTE**
BMC LANE. JAFFNA.



வாடிக்கையாளர்களுக்கும், பாவனையாளருக்கும் ஓர் நற்செய்தி



மக்களின் நன்மதிப்பைப்பெற்ற
றேயல் தயாரிப்புகளை
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்,

**ட்ரேட் சென்ரர்**
**ஹோம் பிறுன்ஸ் லிமிட்.**
155, மானிப்பாய் றேட், யாழ்ப்பாணம்.


## புதிய அதிகாரி

(உடுவில்)

யாழ். அபிவிருத்திச் சபையின் உடுவில் உப அலுவலகத்தின் புதிய அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகஸ்தராக திருமலை அபிவிருத்திச் சபையில் கடமையாற்றிய திரு. இ. கணேஸ்வரன் இடமாற்றம் பெற்று வந்துள்ளார் இதற்கு முன் இங்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகஸ்தராக விருந்த திரு. வ பாலசுப்பிரமணியம் தெல்லிப்பளை அபிவிருத்திச் சபைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.



## பிறந்தநாள் வாழ்த்து

❀ கைதடி கிழக்கு கந்தசாமி தம்பதியின் மகள் தர்மினி இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❀ மானிப்பாய் செல்வலிங்கம் - கிரிஜா தம்பதியின் மகள் ஜானகி முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ கொக்குவில் செம்பியன் லேன் செல்வராஜா - சிவயோகம் தம்பதியின் மகள் மலர்வதனி இன்று பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❀ வல்வெட்டி நல்லையா - நல்லம்மா தம்பதியின் மகள் விஜயலட்சுமி இன்று பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❀ நல்லூர் கோவில் வீதி பாலகிருஷ்ணபிள்ளை - சரோஜினிதேவி தம்பதியின் மகள் பாலாவதனி பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்

❀ நெடுந்தீவு சிங்கராயர் - லில்லிமேரி தம்பதியின் மகள் இன்று எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.


## வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு

தொழிலொன்றுடன் வெளிநாடு செல்லுங்கள். 30 நாடுகளில் 70க்கு மேற்பட்ட பல்வேறு தொழில்கள் (JOB CATEGORIES). உயர் தொழில் முதல் கூலி வேலை வரை. 17 முதல் 50 வயது வரை ஆண்களும் பெண்களும் இலவச விமானச் சீட்டு, தங்குமிட வசதி கட்டணம் எதுவுமில்லை. விண்ணப்பப் பத்திரம் மற்றும் விபரங்கள் அடங்கிய கைநூல் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முதலில் சுய விலாசமிட்ட ரூபா 4/25 முத்திரை ஒட்டிய நீண்ட தபாலுறை அனுப்புக. நேரில் வரவேண்டாம்.

**FOREIGN ASSIGNMENTS,**
**CHUNNAKAM.**


## நன்றி நவிலல்

**திரு. கு. சங்கரப்பிள்ளை அவர்கள்**

கு. சங்கரப்பிள்ளை (வைத்திலிங்கம்) அவர்களின் மறைவின்போது பல்லாற்றாலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், சாவகச்சேரி வடக்கு சமாதான சபையினர், லியோ, லயன்ஸ் கழகத்தினர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கத்தினர், அதிபர், மாணவர்கள், அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினர், தாமோதரம்பிள்ளை வீதி, விழிப்புக் குழுவினர் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், நேரில் வந்து ஆறுதல் கூறியோர் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பெரிய அரசடி
சாவகச்சேரி.

மனைவி, மக்கள்,
மருமக்கள் முதலானோர்.

## வெள்ளத்திற்கு தப்பினாலும்..

(நல்லூர்)

வெள்ளத்துக்குத்தப்பி முளைத்த நெற்பயிரையும் மாடுகள் மேயும் அவல நிலை செம்மணி வீதியிலுள்ள வயல்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளும், விதைக்காத வயலில் புல் மேயக்கட்டும் மாடுகளும் முளைத்துவரும் வயலிலுள்ள நெற்பயிரைக் கடித்துத் தின்னும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

சிவில் நிர்வாகம் சீர்குலைந்திருக்கும் இந்தவேளையில் இது குறித்து யாருக்கு யார் புகார் செய்வதென்று தெரியாது செம்மணி வீதியில் இருபுறங்கும் வயல் விதைத்த விவசாயிகள் பெருங்கவலையடைந்துள்ளனர்.

## வரி விளம்பரம்


### மணமகள் தேவை

யாழ் இந்து உயர்கோபியர் குல மேற்கு ஜேர்மனியில் வேலைசெய்த, 1-1-59ல பிறந்த, செவ்வாய் தோஷமற்ற, அழகிய ஆரோக்கியமான இளைஞருக்கு பத்தொன்பது வயதிற்குட்பட்ட, பிறப்புவிதிஎண்கள் 4-5 5 4 ஆகியவை கொண்ட, அழகான மெல்லிய தோற்றமுடைய மணமகள் தேவை. முழு விபரங்களுடனும், அண்மையில் எடுத்த புகைப்படத்துடனும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி-மல்ரி சேவிசஸ், 37(351) மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம்.

### தவறிவிட்டது

642640232V இலக்க அடையாள அட்டையும், D/L 013348 இலக்க வாகன லைசென்சும் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். க. தட்சணாமூர்த்தி, கச்சேரி - நல்லூர் வீதி, கச்சேரி.

### விற்பனைக்கு

யாழ்ப்பாண மெயின் றோட்டிலிருக்கும் மானிப்பாய் சந்தைக்கு அருகாமையில் 2 பரப்பும் 9 குளியும், சுற்று மதிலும் கொண்ட காணி விற்பனைக்குண்டு. பரப்பு ரூபா ஒருஇலட்சதது பத்தாயிரம். தொடர்பு: கங்காதரன், "செல்வநாயகம் பெலற்ஸ்", சந்தை வீதி, மானிப்பாய்.

4 அடுப்பும் அவனும் கொண்ட "இன்வென்ரம்" அமெரிக்கன் இலக்ரிக் குக்கரும், ரூ இன் வன் றேடியோவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு தொடர்பு: கணேசரத்தினம், நாச்சிமார் கோவிலடி, கூளாவடி, ஆனைக்கோட்டை.



**உங்கள் நத்தார்**

**பண்டிகையின் ஆனந்தத்தை**

மக்களின் பலவருட நன்மதிப்பைப் பெற்ற

# றேயல் தயாரிப்புகள்

**அதிகமாக்கிடும்!**



றேயல் கஸ்ராட்





றேயல் கோப்பி





றேயல் ஜெலி





றேயல் பேக்கிங் பவுடர்





# றேயல் இன்டஸ்றீஸ்

22 1/1. ஆதமலி பில்டிங்,
ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு-13. போன்: 26679

கிளை: றேயல் இன்டஸ்றீஸ், பொன்னையா லேன், வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை.